Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 15 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 16 (31.10.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 31

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல்,மூக்குக் கண்ணாடியகம்

பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்
[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]
இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்

# சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பமாகும்!

## யசூஷி அகாஷி நம்பிக்கை

(மட்டக்களப்பு)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூஷி அகாஷி மட்டக்களப்பில் தெரிவித்தார்.

நேற்று கிழக்கு மாகாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்ட யசூஷி அகாஷி திருகோணமலை மாவட்டத்திற்கான விஜயத்தை முடித்துக் கொண்டு மட்டக்களப்புக்குச் சென்றிருந்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)



## தமிழ்ச்செல்வனை அகாஷி நாளை சந்தித்துப் பேசுவார்!

(கொழும்பு)

சமாதான முயற்சிகளில் ஏற்பட் டிருக்கும் தடங்கல்கள் தொடர்பாக ஆராய்ந்து - நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இலங்கைக்கு வந்திருக்கும் ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் யசுஷி அகாஷி நாளை மறுதினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து புலிகளுடன் பேச்சு நடத்தவிருக்கிறார்.

கிளிநொச்சியில் யசுஷி அகாஷி அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு நடத்துவார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மூவின மக்களின் பிரதிநிதிகளையும் யசூஷி அகாஷி நேற்றுச் சந்திப்பு!



(திகோணமலை)

இலங்கைக்கான ஜப்பான் சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷி நேற்று திருகோணலைக்கு சென்று மூவின மக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்து கலந்துரையாடினார்.

நேற்றுக் காலை திருகோணமலைக்கு சென்றிருந்த யசூஷி

## அயர்லாந்து கட்சித் தலைவருடன் தமிழ்ச் செல்வன் சந்தித்துப் பேச்சு

(டப்ளின்)

பல்வேறு வேறுபாடுடையவர்கள் மத்தியில் வாழக் கற்றுக் கொள்ளுதலும், ஒருவரை ஒருவர் மதித்து நடத்தலுமே அர்த்தமுள்ள ஜனநாயகத்தின் முக்கிய தூண்களாகும் என, அயர்லாந்து சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சி



# மூவின மக்களின் பிரதிநிதிகளையும் யசூஷி அகாஷி நேற்றுச் சந்திப்பு!



(திகோணமலை)

இலங்கைக்கான ஜப்பான் சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷி நேற்று திருகோணலைக்கு சென்று மூவின மக்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்து கலந்துரையாடினார்.

நேற்றுக் காலை திருகோணமலைக்கு சென்றிருந்த யசூஷி அகாஷி புனித மரியாள் கல்லூரியில் சிங்கள மக்களின் பிரதிநிதிகளை சந்தித்தார்.

இதன் பின்னர் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளையும் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது தடைப்பட்டுள்ள சமாதான முயற்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலமை குறித்தும், சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்க வேண்டியதன் அவசிய நிலமை தொடர்பாகவும் மூவின மக்களின் பிரதிநிதிகளுக்கு அகாஷி விளக்கினார்.

சமாதானப் பேச்சுக்களை மீளவும் ஆரம்பிக்க ஜப்பான், அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும் என மூவின மக்களின் பிரதிநிதிகள் அகாஷியிடம் கோரிக்கை விடுத்தனர். (10,04)

# அயர்லாந்து கட்சித் தலைவருடன் தமிழ்ச் செல்வன் சந்தித்துப் பேச்சு



(டப்ளின்)

பல்வேறு வேறுபாடுடையவர்கள் மத்தியில் வாழக் கற்றுக் கொள்ளுதலும், ஒருவரை ஒருவர் மதித்து நடத்தலுமே அர்த்தமுள்ள ஜனநாயகத்தின் முக்கிய தூண்களாகும் என, அயர்லாந்து சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் தலைவரும், முன்னாள் ஐரோப்பிய யூனியனின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜோன் ஹியூம் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை, நேற்றுமுன்தினம் கட்சி அலுவலகத்தில் சந்தித்து உரையாடுகையிலேயே ஜோன் ஹியூம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த ஜோன் ஹியூம் -

நாட்டில் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும், முரண்பாடுகளுக்கான தீர்வினைக் கண்டுகொள்வதற்குமாக இரு தரப்புகளுக்கும் இடையில் உள்ள (12 ஆம் பக்கம் பார்க்க)

## கொலைகள் - சோதனைக் கெடுபிடிகள் குறித்து

# படையினர் – புலிகள் சந்திப்பில் நேற்று விரிவாக ஆராய்ந்தனர்!



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் ஆட்கொலைகள் மற்றும் படையினர் சோதனைச் சாவடிகளில் பொது மக்கள் மீது காட்டப்படும் கெடுபடிகள் உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து படையினருக்கும், புலிகளுக்கும் இடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா படையினருக்குமிடையில் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்தும் இரு தரப்பு சந்திப்பு நேற்று வவுணதீவு யுத்த சூனிய பிரதேசத்தில் ஏற்கனவே திட்டமிட்டபடி நடைபெற்றது.

இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பதில் தலைவர் ஹக்ரப் ஹொக்லன்ட் தலைமையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் குழுவின் சார்பில் மாவட்ட கண்காணிப்பாளர்கள் கலந்துகொண்டார்கள்.

விடுதலைப்புலிகள் தரப்பில் மட்டக்களப்பு-அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் மற்றும் நிர்வாக செயலக பொறுப்பாளர் மார்ஷல் ஆகியோரும். படைத் தரப்பில் 23 ஆவது டிவிசன் கட்டளை அதிகாரி பிரிகேடியர் வஜிர விஜயகுணவர்தனா 23-2 ஆவது பிரிகேட் கட்டளை அதிகாரி கேணல் லக்சிறீ அமரதுங்க விசேட அதிரடிப்படை பொலிஸ் அத்தியட்சகர் வசந்த ரத்னாயக்கா, பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ் சமரதிவாகர உட்பட உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் சோதனைச் சாவடிகளில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் கெடுபிடிகள் இரு தரப்பு பிரதேசங்களிலும், போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு இடமளித்தல் அண்மைக் காலங்களில் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் இடம்பெற்ற ஆட்கொலைச் சம்பவங்கள் போன்றன குறித்து ஆராயப்பட்டன.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக படைத்தரப்பில் பிரிகேடியர் வஜிர விஜயகுணவர்தன வழமை போல் எத்தகைய கருத்துக்களையும் கூற மறுத்துவிட்டார்.

விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை அரசியற் துறைப்பொறுப்பாளர் இ.கௌசல்யன் கருத்துத் தெரிவிக்கையில் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஈராக்கில் கடத்தப்பட்டவர் வத்தளையைச் சேர்ந்தவர்!



(கொழும்பு)

ஈராக்கியத் தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டவர், தினேஸ் தர்மேந்திரா ராஜரட்ணம் என்ற இலங்கையரே என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஹெந்தனை வத்தளையைச் சேர்ந்த மூன்று ஆண்பிள்ளைகளின் தந்தையான இவர் குடும்ப வறுமை காரணமாக 2003 ஆம் ஆண்டு யூன் மாதம் 'ட்ரக்' சாரதியாக தொழில் புரிவதற்கு குவைத் சென்றிருந்தார்.

1968 ஆம் ஆண்டு பிறந்த தினேஸ் தர்மேந்திரா ராஜரட்ணம் வத்தளை புனித அந்தோனியார் கல்லூரியின் பழைய மாண

(12 ஆம் பக்கம் பார்க்க)


இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR

Your friend in the skies...

## நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு
## தீவக வலயப் பாடசாலை மாணவரிடையே இலக்கியப் போட்டி நடத்த ஏற்பாடு!

நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு போருட் நிறுவனத்தினால் தீவக வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் கட்டுரை, கவிதை, பேச்சு, ஓவியப் போட்டிகளை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

பாடசாலை மட்டத்தில் கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகளை நடாத்தி - முதல் மூன்று இடங்களைப்பெறும் மாணவர்களது ஆக்கங்களை நாளைக்கு முன்னர் கோட்டங்களுக்கு அனுப்பி வைக்குமாறு தீவக வலய பணிப்பாளர் அதிபர்களைக் கேட்டுள்ளார்.

வேலணைக் கோட்டத்திற்கான பேச்சுப் போட்டி மறுநாள் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்துறைக் கோட்டத்துக்கான பேச்சுப் போட்டி ஊர்காவற்றுறைக் கோட்டக்கல்வி அலுவலகத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வேலணை கோட்டத்துக்கான போட்டி சனிக்கிழமை வேலணை சரஸ்வதி வித்தியாலத்தில் நடைபெறவுள்ளது.

### பெற்றோர் தின விழா

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையினது இந்த ஆண்டுக்கான பெற்றோர் தினவிழா இன்று முற்பகல் 9 மணிக்கு வித்தியாலயத்தின் முத்துக்குமாரு அரங்கில் நடைபெறவுள்ளது. அதிபர் வே. ஞானகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இந்து கலாசார அலுவலகள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட உதவிப் பணிப்பாளர் சிவ.மகாலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றார்.

### இசைநிகழ்ச்சி

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நடாத்தும் மாதாந்த இசை நிகழ்ச்சி இன்று மாலை 5 மணிக்கு ஆதீனமண்டபத்தில் ஸ்கந்தவரோதயா கல்லூரி உபஅதிபர் ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்ச்சியில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்து றைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

## வீதி திருத்தப்படாமையால் பொதுமக்கள் சிரமம்!

யாழ்.பாங்ஷால் வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாமல் குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

சென்.பற்றிக்ஸ் வீதிக்கு அப்பால் டேவிட் வீதி, மஷன்கார் மேல் வீதி, ஆறாம் குறுக்கு வீதி, சின்னக்கடை ஆகிய பகுதிகளுக்கு உட்பட்ட இடங்களில் வீதி மிக மோசமாகப் பழுதடைந்துள்ளது.

சின்னக்கடைச் சந்தைக்குச் செல்வோரும், பற்றிக்ஸ் கல்லூரிக்கு செல்லும் மாணவர்களும் இந்த வீதியைப் பயன்படுத்துகையில் பல விபத்துக்களுக்கு உள்ளவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரவு வேளைகளில் மின்கம்ப விளக்குகளும் பொருத்தப்படாததால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (206)

## சாவகச்சேரி சந்தையின் உட்பகுதியில்
## வர்த்தக நிலையங்களை ஆரம்பிக்கத் தவறின் ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்படும்.

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சந்தையின் உட்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட வர்த்தக நிலையங்களில் உடன் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டுமென நகரசபைச் செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் வர்த்தகர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபை சந்தையின் உட்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட வர்த்தக நிலையங்களை அமைத்திருந்தது. இந்த வர்த்தக நிலையங்களில் 24 வர்த்தக நிலையங்கள் ஒப்பந்த அடிப்படையில் தனியாருக்கு வழங்கப்பட்டது.

எனினும், இவை வழங்கப்பட்டு நீண்ட காலமாகியும் திறக்கப்படாமல் உள்ளன. இந்த வர்த்தக நிலையங்களைத் திறப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்காதவர்களின் ஒப்பந்தங்கள் இரத்துச் செய்யப்படும் என நகரசபையின் செயலாளர் தெரிவித்தார். (29)

## உதவி வர்த்தக பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வர்த்தக, வாணிப நுகர்வோர் விவகார அமைச்சு வர்த்தக திணைக்களத்துக்கு உதவி வர்த்தகப்பணிப்பாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பத்தைக் கோரியுள்ளது.

வெளிநாடுகளிலும் பணிபுரிய வேண்டிய இந்தப்பதவிக்கு பொருளியல், வணிகவியல், பொது நிர்வாகம் ஆகிய பாடநெறிகளில் ஏதாவது ஒன்றின் முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு பட்டம் பெற்ற நாற்பத்தைந்து வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சை ஒன்றுக்கு தோற்றி சித்தியடையும் பட்சத்தில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தெரிவுகள் இடம்பெறும்.

விண்ணப்பங்கள் யாவும் அடுத்த மாதம் 29ஆம் திகதிக்கு முன்பாக செயலாளர் வர்த்தக வாணிப நுகர்வோர் விவகார அமைச்சு பொக்ஷோல் வீதி, த.பெ.இல.560 கொழும்பு - 02 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி கோரப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை இந்த மாதம் 29 ஆம் திகதி அரச வர்த்தமானப்பத்திரிகையில் பார்வையிட முடியும். (31)


**அறிவித்தல்**

"யாழ்.மாவட்ட ப.நோ.கூ.சங்கங்கள் அடுத்த கட்ட உலர் உணவு விநியோகத்துக்கான வழங்கற் கட்டளைகளை யாழ்.மாவட்டச் செயலக புனர்வாழ்வு புனரமைப்புப் பகுதியில் 01.11.2004 ஆம் திகதி முதல் பெற்று, விநியோக நடவடிக்கைகளை ஓரிரு தினங்களில் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்டச் செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் அறியத்தந்துள்ளார்."

ம.பிரதீபன்,
உதவித்திட்டப் பணிப்பாளர்,
யாழ்.அரச அதிபருக்காக.

(C/3299)



**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சூரியா, மாதவன், சித்தார்த், திரிஷா, மீராஜஸ்மின், பாரதிராஜா நடிப்பில

**ஆய்த எழுத்து** (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)

TYCUS

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 9.45, (பு.நே)

(சி-2723)

**நாகம்ஸ்** சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான




ஸ்ரீகாந்த், சினேகா, கபாலி மற்றும் நாகேஷ் நடித்த (ரீல்ஸ்)

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)

**ராஜா** யாழ்ப்பாணம்.

3 ஆவது ஜனத்திரள் வாரம்

இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த

**7/G ரெயின்போ காலனி**

இது ஒரு உண்மைக் கதை

பு.நே 10.30, 2.30,6.30,9.30 மட்டும்

ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்

(சி-2724)


## வடமராட்சி பாடசாலைகளில்
## கொட்டகைகள் வேய்வதற்கு கிடுகுகள் வழங்க ஏற்பாடு!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் தற்காலிக கொட்டகைகளை வேய்வதற்குரிய கிடுகுகளை வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனம் வழங்கவிருக்கிறது.

மழை காலம் ஆரம்பித்துள்ளமையால் மாணவர்கள், ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை மழையில் நனைந்தே மேற்கொண்டு வருகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு கட்டைக்காடு றோ.க.த.க வித்தியாலயம், வெற்றிலைக்கேணி றோ.க.த.க வித்தியாலயம், செம்பியன் பற்று றோ.க.த.க வித்தியாலயம் ஆகியவற்றுக்கே கூரைகள் வேய்வதற்கு கிடுகுகள் வழங்கப்படவிருக்கின்றன. (21)

## யாழ்.மாவட்டத்தில்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,

ம.பிரதீபன்,
உதவித்திட்டப் பணிப்பாளர்,
யாழ்.அரச அதிபருக்காக.

(C/3299)


ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால்
நடித்த
7/G றெயின்போ காலனி
இது ஒரு உண்மைக் கதை
பி.நே 10.30, 2.30, 6.30, 9.30 மட்டும்
ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்


காலிக கொட்டகைகளை வேய்வதற்குரிய கிடுகுகளை வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு நிறுவனம் வழங்கவிருக்கிறது.

மழை காலம் ஆரம்பித்துள்ளமையால் மாணவர்கள், ஆசிரியர்கள் கற்றல், கற்பித்தல் நடவடிக்

கட்டைக்காடு றோ.க.த.க வித்தியாலயம், வெற்றிலைக்கேணி றோ.க.த.க வித்தியாலயம், செம்பியன்பற்று றோ.க.த.க வித்தியாலயம் ஆகியவற்றுக்கே கூரைகள் வேய்வதற்கு கிடுகுகள் வழங்கப்படவிருக்கின்றன. (21)


# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
06 - 08 - 1928



மறைவு
28 - 10 - 2004

## அமரர் நாகமுத்து திருநாவுக்கரசு J.P

வலி - வடக்கு கால் நடைவளர்ப்போர் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவரும், இந்நாள் உப - தலைவரும் சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னாள் தலைவரும், ஆகிய புன்னாலைக் கட்டுவன் தெற்கைச் சேர்ந்த

**அமரர் நாகமுத்து திருநாவுக்கரசு JP**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டுத் துயருறுகிறோம். எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறோம். அன்னாரின் குடும்பத்தினருக்கும், சுற்றத்தவர்களுக்கும், நண்பர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரது ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டி இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி!

(C/3300)

தெல்லிப்பளை
31 - 10 - 2004

வலி - வடக்கு
கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்



**இலவசமாக கண்களைப் பரிசோதித்துச் சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும். இழந்த பற்களுக்கு நிகரான சங்குப்பற்களை கட்டிக் கொள்ளவும், பொருத்திக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்**

# எரிக் கணேஷ்

564, 566 ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
T.P 021 222 2486

இல 91 கே.கே.எஸ். வீதி
கொக்குவில் சந்தி
கொக்குவில்.

இல 80 கே.கே.எஸ்
வீதி,
சுன்னாகம்.



## யாழ்.மாவட்டத்தில்

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை,
தமிழ் மாணவர் ஒன்றியம் - யாழ். மாவட்ட வலயக் கல்விப் பணிமனைகளின் இணைந்த ஆதரவுடனும்,

## கிளிநொச்சி மாவட்டத்தில்

தமிழ் மாணவர் ஒன்றியம் - கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை ஆகியவற்றின் இணைந்த ஆதரவுடன்

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

**க.பொ.த. (சா/த) - 2004 டிசம்பர் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்குகளை (பரீட்சைகளும், மீட்டல் வகுப்புகளும்) யாழ். மாவட்டத்திலும், கிளிநொச்சி மாவட்டத்திலும் இலவசமாக நடாத்த உள்ளது.**

**மேலதிக விபரங்கள் வெகு விரைவில் நமது ஈழநாடு நாளிதழில் வெளிவரும்**

பாடசாலை பரீட்சார்த்திகளும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இக் கருத்தரங்கில் பங்குபற்றலாம்

### யாழ்.மாவட்டத்துக்கான இணை அனுசரணை

45 வருடகாலசேவையில்
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டஸ்
212, கே.கே.எஸ் வீதி
யாழ்ப்பாணம்.

BOC தேசத்தின் வங்கியாளார்
இலங்கை வங்கியின்
18 plus இளம்பருவத்தினருக்கு
அன்புடன்....

SICS கணினி சேவைகள்
இல.125A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
எங்களின் நோக்கம்.
உங்களின் தொழில் நுட்பமுன்னேற்றம்.

COMMERCIAL BANK
Our Interest Is In You

UNIT
347, K.K.S. Road,
Jaffna

Global Info
IDM (PVT) LTD.,
Authorized ICT Education
JAFFNA CENTER
IDM
The Nation's ICT Academy
451, K K S ROAD, JAFFNA TP: 021-4591398

Softview Computer College
43, Arasady Road, Thaddatheru
Junction, Jaffna

S.T.P
73, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

சொலெக்ஸ் பல்மூக்கு கண்ணாடியகம
516, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம
302, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

IIS
100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 2831

# விமல் வீரவன்சவின் கருத்துக்கு ஜனாதிபதி சந்திரிகா கடும் விசனம்



சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்டதுடன், சுதந்திரக் கட்சியின் பலத்த ஆதரவும் கிடைத்திராவிடின், தற்போது அனுபவிக்கும் அதிகார பலத்தையும் புகழையும் அடைந்திருக்க ஜே.வி.பி.க்கு எந்த வாய்ப்பும் இருந்திராது என்று ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

தங்களது ஆதரவினால் மட்டுமே சந்திரிகாவின் சுதந்திரக் கட்சி ஆட்சியமைக்க வாய்ப்பு உருவானது என்று பல தடவை தெரிவித்துள்ள ஜே.வி.பி.யினர், ஆளும் கூட்டணியிலிருந்து விலகிவிடப் போவதாகப் பலதடவை சுதந்திரக் கட்சியினரை மிரட்டி வந்துள்ளனர்.

எனினும் இந்தத்தடவை நேரடியாக ஜனாதிபதி சந்திரிகாவின் அமைச்சர்களை நியமிப்பது தொடர்பான முடிவை எதிர்த்து கடுமையான விமர்சனக் கணைகளை விடுத்ததுடன் கூட்டணியிலிருந்து விலகிவிடப் போவதாக ஜனாதிபதியையே மிரட்டியுள்ளமை, ஜனாதிபதி செயலகத்தை விசனத்துக்குள்ளாக்கியுள்ளது.

ஜே.வி.பி.யின் இந்தக் கருத்து தொடர்பாகக் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ள ஜனாதிபதி சந்திரிகா -

நாடுதழுவிய ரீதியில் ஜே.வி.பி.யினர் தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்து வெளியிடும் கருத்துக்கள் மிகவும் முட்டாள்தனமானவை என்றும், ஒரு கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிக்குரிய ஆகக்குறைந்த தகுதிகூட அற்ற நிலையில் மிகவும் கீழ்த்தரமாக ஜே.வி.பி. செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

கடந்த காலத்தில் பயங்கரவாதத்தைத் தங்களது அதிகார ஆயுதமாகப் பயன்படுத்திய ஜே.வி.பி.யினரை சுதந்திரக் கட்சி, தன்னுடன் கூட்டுச் சேர்த்துக் கொண்டதன் மூலம் மட்டுமே ஜே.வி.பி. தற்போதைய அரசியல் சுகங்களையும் அனுகூலங்களையும் அனுபவிக்கிறது. இதை மறந்து, தான்தோன்றித்தனமாக ஜே.வி.பி. புலம்புவதை சுதந்திரக்கட்சி இனிமேலும் பொறுத்துக்கொண்டிருக்கப் போவதில்லை என்றும் சந்திரிகா கண்டித்துள்ளார்.

# அரசாங்க நிதிமோசடி

## இரு முன்னாள் அமைச்சர் மீது கொழும்பு நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

ஐக்கிய தேசியமுன்னணி ஆட்சிக் காலத்தில் சமுர்த்தி, சமூக பாதுகாப்பு அபிவிருத்தி நிதியை மோசடி செய்ததாகக் குற்றம்சுமத்தி முன்னாள் அமைச்சர்கள் இருவர் உட்பட 6 பேருக்கு எதிராக கொழும்பு பிரதம நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் விசேட குற்றப்புலனாய்வுத் துறையினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

முன்னாள் சமுர்த்தி விவகார அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க, மகளிர் விவகார அமைச்சர் அமரா பியசீலி ரத்னாயக்க, மொனராகலை மாவட்ட சமுர்த்தி, மகளிர் அபிவிருத்தி தலைவி நில்மினி விஜயகோன், செயலாளர் சஞ்சகுலத்சிங்க, பொருளாளர் அனோமா குமாரி ஹேரத் இரத்தினபுரி மாவட்ட சமுர்த்தி, சமூக அபிவிருத்தித் தலைவி மேகாவதி தாப்ரு ஆகியோருக்கு எதிராகவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக்கொண்ட கொழும்பு பிரதம நீதிமன்ற நீதிபதி சரோஜினி குசேல விஜயவர்தன குறிப்பிட்ட 6 பேரும் நீதிமன்ற அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியேறுவதற்கும் தடை விதித்துள்ளார்.

இவர்களைக் கைதுசெய்ய வேண்டிய தேவையேற்பட்டால் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளவேண்டுமென குற்றப் புலனாய்வுத்துறையினருக்கு உத்தரவிட்ட நீதிபதி மேலதிக அறிக்கை சமர்ப்பிப்பதற்காக எதிர்வரும் 8 ஆம் திகதிவரை கால அவகாசமும் வழங்கியுள்ளார்.

# ஜமாலியா அகதிமுகாமின் கூரை இடிந்து வீழ்ந்து மூவர் காயம்!



(திருகோணமலை)

திருகோணமலை ஜமாலியா பிரதேசத்திலுள்ள அகதிகள் முகாமின் கூரை இடிந்து வீழ்ந்ததில் அங்கு தங்கியிருந்த முஸ்லிம் அகதிகளில் மூவர் காயமடைந்தனர்.

கடந்த வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மூவரும் திருமலை பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களில் ஒருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த அகதிமுகாம் பகுதியில் 28 குடும்பங்களைச் சேர்ந்த 200 பேர் வசித்து வருகின்றனர். கடும் மழை காரணமாகவே இந்த அகதிமுகாமின் கூரை இடிந்து வீழ்ந்தது.

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு திருமலை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கு உதவிகள் வழங்குவது தொடர்பாகவும் ஆராய்ந்தார்.

# பொருட்களின் விலை அடுத்தமாதம் குறையும்

## ஜனாதிபதி கூறுகிறார்

பொருட்களின் விலை எதிர்வரும் மாதங்களில் குறைவடையும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நம்பிக்கை தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்தார்.

எண்ணெய் விலையைக் குறைப்பதற்கு அரசாங்கத்தால் முடியாவிட்டாலும், மக்களுக்குச் சலுகைகளை வழங்குவதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவருகிறது. எமது அரசாங்கத்துக்குக் குற்றங்களை மறைக்கும எண்ணம் இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஹெல உறுமய குற்றச்சாட்டை கனடிய தூதரகம் நிராகரிப்பு!

(கொழும்பு)

பௌத்த பிக்குகள் ஆடைகளையப்பட்டு குளிப்பாட்டப்பட்டதாக கனடிய தூதரகம் மீது ஜாதிக ஹெல உறுமய கட்சி சுமத்திய குற்றச்சாட்டைக் கொழும்பிலுள்ள கனடிய தூதரகம் மறுத்துள்ளது.

இது தொடர்பாக தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் -

விசா பெறவந்த பௌத்த பிக்கு ஒருவரின் கடவுச்சீட்டில் காணப்பட்ட ஒருவகைப்பவுடர் காரணமாகவே அந்திராக்ஸ் தொடர்பான சந்தேகம் எழுந்ததாகவும் கனேடிய தூதரக அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை பிரான்ஸ் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள பாதணிகளில் புத்தரின் உருவம் பொறிக்கப்பட்டமை குறித்து புத்த சாசன அமைச்சு ஆட்சேபனை கடிதமொன்றை கொழும்பிலுள்ள பிரான்ஸ் தூதுவருக்கு அனுப்பிவைத்தது. பௌத்த சமயத்தை அவமதிக்கும் வகையில் இந்தப் பாதணி தயாரிக்கப்பட்டுள்ளதால் இதன் விற்பனை தடைசெய்யப்படவேண்டும் என்று அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# இடைக்கால நிர்வாகம்; கொழும்பில் கருத்தரங்கு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஆலோசனையால் நாடு இரண்டாகப் பிளவுபடுவது, குறித்து பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கான மாநாடொன்றை டிசம்பர் முதல்வாரத்தில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடத்துவதற்கு - சமாதானத்துக்கான அனைத்துலக அமைப்பு தீர்மானித்துள்ளது.

இந்த மாநாட்டில் பிரபல பாதுகாப்பு விமர்சகர் போல் ஸ்டெடிஸ் அமெரிக்காவின் கிரண்ட கோப்பரேஷனின் ஆலோசகர் பீற்றர் ஹொக், கனடா, ரொறன்ரோ ஸ்ரார் பத்திரிகையின் ஆசிரியபீடத்தைச் சேர்ந்த ரூவல்ட் பெல்ட், கலாநிதி சுகந்த குணதிலக, பேராசிரியர் சாந்த கெட்நாயக்க ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இந்திய ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமிக்கும் இதில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இடைககால நிர்வாகசபை ஆலோசனையின் நோக்கம், வடக்கு - கிழக்கு மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதே என்றும், புலிகள் அமைப்பு மேற்கொண்டுள்ள பிரசாரத்தின் நோக்கத்தை சர்வதேசத்துக்குத் தெரியப்படுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நிர்வாக சபை ஆலோசனை பற்றி இலங்கையில் நடைபெறவுள்ள முதலாவது மாநாடு இதுவாகும். 25 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கு இந்த மாநாட்டில் கலந்துகொள்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த அமைப்பின் பேச்சாளர் தெரிவித்தார். (தே)

## தேர்தலை இலக்குவைத்து ஆயிரம் கூட்டங்கள்

ஜனாதிபதித் தேர்தலை இலக்குவைத்து நாடுமுழுவதும் ஆயிரம் கூட்டங்களை நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. இதன் ஆரம்பக் கூட்டம் எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் ஆரம்பமாகுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

கட்சித்தலைவர் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இந்தக் கூட்டத் தொடர் கிராமிய, மாவட்ட, தேசிய மட்டங்களில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் பிரசார கூட்டங்களை நடத்தவென ஐக்கிய தேசியக் கட்சி குழுவொன்றையும் நியமிக்கத் திட்டமிட்டுள்ளது.

# விமல் வீரவன்சவின் ஜனாதிபதி குறித்த கருத்துக்கு ஆளும்கட்சி எம்.பிக்கள் கண்டனம்



ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, ஜனாதிபதி சம்பந்தமாகத் தெரிவித்த கருத்துக்களுக்கு பிரதியமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த 25 ஆம் திகதி இரத்தினபுரியில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச- அரசியல் அமைப்பு அடிப்படையில் ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரம் இருந்தபோதும், கடந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கக் காலத்தில் நிறைவேற்று அதிகாரத்தைச் செயற்படுத்த முடியாத நிலையில் இருந்தது.

ஜனாதிபதி தனது அதிகாரத்தைப் பயன்படுத்தமுடியாது தளர்ந்து போய் இருந்தார். அமைச்சரவைக்குச் சென்றவுடன் ரவி கருணாநாயக்க போன்றவர்கள் வாழ்வைப் பற்றியும் வாகனங்களைப் பற்றியும் பேசினர்.

அந்தக் காலங்களில் ஜனாதிபதியின் கண்களின் கீழ் கருவளையங்கள் காணப்பட்டன. ஏனென்றால், அவர் நித்திரை கொள்வதில்லை. இரவில் ரவியின் நிழல்களே கொடுமைகளாகத் தெரியும். இவர்கள் நிறைவேற்று ஜனாதிபதி அதிகாரத்தை மழுங்கடித்திருந்தார்கள்.

அரசியல் சாசனத்தின் ஊடாக நிறைவேற்று அதிகாரம் கிடைப்பதாகச் சிலர் தற்போது கருதுகின்றார்கள். ஆனால், அந்த அதிகாரத்தை அவராற் பயன்படுத்தமுடியாது இருந்தது. அந்த அதிகாரத்திற்கு உயிர்கொடுக்கமுடியாமல் இருந்தார். முகத்தில் இருள் சூழ்ந்திருந்தது. என்ன செய்வது எனப் புரியாத நிலையில் இருந்தார்.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்திலேயே இந்தத் தேசிய இயக்கம் உருவானது. இந்த இயக்கம் ஆயிரக் கணக்கானவர்களைத் திரட்டி வீதிகளில் இறங்கி கால்நடையாகச் சென்று ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரத்துக்கு உயிர் கொடுத்தது. அப்படியிராவிட்டால் அவர் இப்போதும் இருள் சூழ்ந்த முகத்துடன் உள்ளேயே இருப்பார். முன்பு இரவில் விழித்திருப்பார் பகலில் நித்திரை கொள்வார். இன்றும் அப்படியே உள்ளார். சிலருக்கு இது ஞாபகத்தில் இல்லை. உங்களுக்கு ஞாபகம் இருக்கும். ஆனால், ஞாபகம் வரவேண்டியவர்களுக்கு இது ஞாபகம் வரவில்லை.

நிறைவேற்று அதிகாரம் மழுங்கடிக்கப்பட்ட காலத்தில் நடுக்கத்துடன் இருந்த நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ரணிலுக்கு மட்டும் கடிதங்கள் எழுதினார். சில கடிதங்கள் பகிரங்கப்படுத்தப்படவுமில்லை. அவை பற்றி வெளிப்படையாகக் கூறவுமில்லை. சர்வதேச சமூகத்தினர் வந்து ஜனாதிபதியை உஷார்படுத்திவிட்டுச் செல்கின்றார்கள்.

50 சதத்தின் பெறுமதிக்கு அவர் தள்ளப்பட்டிருந்தார். 50 சதத் திற்கு மட்டுமே, குறைந்தது ஒரு ரூபாய்க்குக்கூட அல்ல. அந்தளவுக்கு அவர் பலமிழந்திருந்தார். ஓய்வூதியம் பெற்ற பின்னரும் சீருடை அணியும் பொலிஸார் போலவே இருந்தார். ஓய்வு பெற்ற பின்னரே இந்த நிலைக்குப் பொலிஸார் தள்ளப்படுவர். ஓய்வூதியம் பெறாமலே இந்த நிலைக்கு ஜனாதிபதி தள்ளப்பட்டிருந்தார் எனத் தெரிவித்திருந்தார்.

விமல் வீரவன்சவின் இந்தக் கருத்துக்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமைப்பு -

விமல் வீரவன்ச திருத்திக்கொள்ளாததன் காரணமாக இது தொடர்பாக வெளிவந்த அறிக்கைகள் உண்மையென ஏற்றுக்கொள்ள வேண்டிவரும் என கூட்டமைப்பின் தலைவரும் ஒருங்கிணைப்பாளருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

கடந்த அரசாங்க காலத்தில் ஜனாதிபதி தனிப்பட்ட முறையிலும், அரச மட்டத்திலும் பல நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவேண்டி ஏற்பட்டதாகவும், அதனால், ஜனாதிபதி உள மற்றும் உடல்ரீதியாக எதிர்நோக்கிய நெருக்கடி முகத்தினூடாக வெளிப்படல் இயற்கையானது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். எவ்வாறிருப்பினும் விமல் வீரவன்ச ஜனாதிபதிக்கு சேறு பூசும் முயற்சியில் ஈடுபட்டுள்ளமை கவலைதருவதாகவும் பெரேரா குறிப்பிட்டார்.

இலங்கையுடனான டெஸ்ட்

# யுனுஸ்கான், இன்ஸமாம் சதம்; பாகிஸ்தான் 478 ஓட்டங்கள்!



(கராச்சி)

யுனுஸ்கான், இன்ஸமாம் உல் ஹக் ஆகியோரின் அபாரமான சதங்களின் மூலம் இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதலாவது இனிங்ஸில் பாகிஸ்தான் 478 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 298 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்த பாகிஸ்தான் அணி நேற்றுக்காலை தொடர்ந்து ஆடியது.

79 ஓட்டங்களுடன் இருந்த இன்ஸமாமுடன் யூசுப் யுகானா இணைந்து நேற்று ஆட்டத்தைத் தொடங்கினார். இவர்கள் இருவரும் இணைந்து நிலைத்து நின்று ஆடினர். இவர்களின் விக்கெட்டைப் பறிப்பதற்கு இலங்கை அணிப் பந்து வீச்சாளர்கள் கடும் முயற்சி எடுக்க வேண்டியிருந்தது.

ஆயினும் பாகிஸ்தான் அணியின் ஓட்ட எண்ணிக்கை 374 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில்தான் - யூசுப் யுகானாவின் விக்கெட்டை வீழ்த்த முடிந்தது.

இவர் 64 பந்துகளில் - 2 சிக்சர், 5 பவுண்டரிகளுடன் 46 ஓட்டங்களைக் பெற்றிருந்த நிலையில் - சமிந்த வாஸின் பந்துவீச்சில், ஜெயவர்த்தனவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து, சொகைப் மலிக் களமிறங்கி இன்ஸமாமுடன் இணைந்தாடினார். இதற்கிடையில் இன்ஸமாம் தனது 20 ஆவது டெஸ்ட் சதத்தை அடித்தார்.

ஆயினும் அவர் 117 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர் 244 பந்துகளில் 1 சிக்சர், 10 பவுண்டரிகளுடன் 117 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து அப்துல் ரசாக் களம் இறங்கி மலிக்குடன் இணைந்து ஆடினார். இவர்கள் ஓரளவுக்கு நிலைத்து நின்று ஆடிக்கொண்டிருந்த நிலையில் - அப்துல் ரசாக் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

கம்ரன் அக்மல் அடுத்ததாகக் களம் இறங்கினார். மேலும் - சொகைப் மலிக் 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நேரிட்டது. அடுத்ததாக அக்மல் 15 ஓட்டங்களுடனும் நவீட் உல் ஹசன் 11 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க நேரிட்டது.

டனேஸ் கனேரியா 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். பாகிஸ்தான் அணி 478 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.



பந்துவீச்சில் வாஸ் மற்றும் டில்ஹார ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், ரங்கன ஹேரத் 2 விக்கெட்டுக்களையும், ஜெயசூரியா மற்றும் ம.்.ரூப் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து, இரண்டாவது இனிங்ஸில் விளையாடக் களமிறங்கிய ஜெயசூரியவும், அத்தப்பத்துவும் இணைந்து ஆடிக்கொண்டிருந்த போது ஸ்கோர் 117 ஆக இருந்தபோது அத்தப்பத்துவின் விக்கெட் கனேரியாவால் வீழ்த்தப்பட்டது. இவர் 25 ஓட்டங்களைப் பெற்றார்.

அதேவேளை, ஜெயசூரியா அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். இவர் நேற்றைய ஆட்டநேர முடிவில் 104 பந்துகளில் 14 பவுண்டரிகள், 1 சிக்சருடன் 96 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இவருடன் சங்ககார 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். நேற்றைய ஆட்டநேர முடிவில் இலங்கை அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 134 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

மாவீரர் நாளை முன்னிட்டு யாழ். மாவட்ட விளையாட்டுத் துறையினரால் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டிகள் யாழ்ப்பாண லீக், வலிகாமம் லீக், வடமராட்சி லீக்குகளுக்கிடையில் நடைபெறவுள்ளன.

இதில் ஒவ்வொரு லீக்கிலிருந்தும் முன்னணிக் கழகங்கள் ஆறு தெரிவுசெய்யப்பட்டு சுற்றுப் போட்டிகள் இடம்பெறவுள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டிகள் யாவும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (12)

## தென்மராட்சி வலயத்தில் தாச்சிச் சுற்றுப்போட்டி!

தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான தாச்சிச் சுற்றுப் போட்டிக்கான ஏற்பாடுகளில் தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

இந்தப் போட்டி நாளைமறுதினம் பிற்பகல் 2.00 மணிக்கு கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தில் தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

3 ஆம் இடத்துக்கான ஆட்டம் (ஆண்கள்)

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தை எதிர்த்து யாழ். விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயமும்

3 ஆம் இடத்துக்கான ஆட்டம் (பெண்கள்)

சாவகச்சேரி மகளிர் கல்லூரியை எதிர்த்து கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயமும்

1 ஆம், 2 ஆம் இடத்துக்கான இறுதி ஆட்டங்கள் (பெண்கள்)

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தை எதிர்த்து மிருசுவில் றோ.க.பாடசாலை,

(ஆண்கள்)

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தை எதிர்த்து கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயமும் மோதவுள்ளன. (29)

மும்பை டெஸ்ட் போட்டி

# இந்திய அணியிலிருந்து 4 வீரர்கள் நீக்கப்பட்டனர்!



(புதுடெல்கி)

இந்திய - அவுஸ்ரேலிய அணிகளுக்கு இடையிலான 4 ஆவது டெஸ்ட் மும்பையில் வரும் 3 ஆம் திகதி தொடங்கி 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய அணியில் 4 மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து மோசமாக விளையாடிய விக்கெட் காப்பாளர் பார்த்திவ் பட்டேல், யுவராஜ் சிங், ஆகாஷ் சோப்ரா மற்றும் அகர்கர் ஆகியோர் நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக கௌதம் காம்பீர், தீராஜ் யாதவ், எஸ். எஸ். பவுல் மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த விக்கெட் காப்பாளர் தினேஷ கார்த்திக் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நீக்கப்பட்ட விக்கெட் காப்பாளர் பார்த்தீவ் பட்டேல் கீப்பிங் செய்வதில் அவரது விளையாட்டு மிகவும் மோசமாக இருந்தது. சென்னை மற்றும் நாக்பூரில் நடந்த டெஸ்ட் போட்டியில் பல பிடிகளை தவறவிட்டார். இதனால் அவர் 4 ஆவது டெஸ்ட் போட்டியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

ஆகாஷ் சோப்ரா பெங்களூரில் நடந்த முதல் டெஸ்டில் (0, 5) ஓட்டங்களும், நாக்பூரில் நடந்த டெஸ்டில் (09, 01) எடுத்து மோசமாக விளையாடி உள்ளதால் அவர் நீக்கப்பட்டார்.

யுவராஜ் சிங்கும் பெங்களூர் டெஸ்டில் (27, 05) சென்னை டெஸ்டில் (08, 07அவுட் இல்லை) ஓட்டங்கள் எடுத்து மோசமாக விளையாடி உள்ளதால் நீக்கப்பட்டார். அகர்கர் நாக்பூர் டெஸ்டில் விளையாடினார். அதில் அவரது பந்து வீச்சு எடுபடாததால் நீக்கப்பட்டார்.

# 450 ஆவது விக்கெட்டை மக்ரா கைப்பற்றினார்!



அவுஸ்ரேலிய அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான கிளென் மக்ரா, நாக்பூரில் இந்தியாவுக்கு எதிராகத் தனது 100 ஆவது டெஸ்ட் போட்டியில் விளையாடியிருந்தார்.

முதல் இனிங்சில் அவர் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இதன் மூலம் அவர் 449 ஆவது விக்கெட்டை தொட்டிருந்தார்.

நேற்று முன்தினம் 2 ஆவது இனிங்சில் டெண்டுல்கர் விக்கெட்டை எடுத்ததன் மூலம் மக்ரா450 விக்கெட்டைக் கைப்பற்றினார். இந்த விக்கெட்டை எடுத்த 4 ஆவது வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். அவர் முரளி கார்த்திக், விக்கெட்டையும் நேற்றுமுன்தினம் கைப்பற்றினார்.

மக்ரா 100 டெஸ்டில் 451 விக்கெட்டுக்களை எடுத்துள்ளார். 38 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியது அவரது சிறப்பான பந்து வீச்சாகும். 3 முறை 10 விக்கெட்டுக்கு மேலும், 24 முறை 5 விக்கெட்டுக்கு மேலும் எடுத்துள்ளார்.

டெஸ்ட் போட்டியில் 450 விக்கெட்டுக்கு மேல் எடுத்த வீரர்கள் வருமாறு-

1. ஷேன் வோன் (அவுஸ்ரேலியா) 115 டெஸ்டில் 541 விக்கெட்டுக்கள், முரளீதரன் (இலங்கை) 91 டெஸ்டில் 532 விக்கெட்டுக்கள், வோல்ஷ் (மேற்கிந்தியத்தீவுகள்) 132 டெஸ்டில் 519 விக்கெட்டுக்கள், மக்ரா (அவுஸ்ரேலியா) 100 டெஸ்டில் 451 விக்கெட்டுக்கள்.

# திட்டங்களை நிறைவேற்ற முடியாததால் தோற்றோம்

## இந்திய அணித்தலைவர் டிராவிட் தெரிவிப்பு

(நாக்பூர்)

நினைத்த திட்டங்களை நிறைவேற்ற முடியாததாலேயே அணி தோல்வியுற்றது என இந்திய கிரிக்கெட் அணியின் தற்காலிக கப்டன் ராகுல் டிராவிட் கூறினார்.

தோல்வி குறித்து டிராவிட் கூறியதாவது -

நாங்கள் துடுப்பெடுத்தாடியவிதம் ஏமாற்றமளிக்கிறது. ஆனால், அணியின் அனைத்து வீரர்களும் கடினமாகப் போராடினார்கள். சரியான மனப்பான்மையுடன்தான் விளையாடினார்கள். ஆனால் துரதிஷ்டவசமாக எங்களது திட்டங்களை நிறைவேற்றி, திறமையை வெளிப்படுத்த முடியவில்லை.

நாக்பூரில் ஆட்டம் மிகக் கடினமாக இருந்தது. அவுஸ்ரேலிய வீரர்கள் மிகச் சிறப்பாக விளையாடி எங்களை வென்றுவிட்டார்கள்.

நாக்பூரில் மைதானத்தின் சூழல் அவர்களுக்கு ஏற்றதாக இருந்தது.சூழலுக்கு ஏற்றவாறு அவர்கள் தங்களைத் தயார் செய்து கொண்டார்கள்.

அவுஸ்ரேலிய அணி சிறந்த அணி. அவர்கள் இந்தியாவுக்கு அடிக்கடி வருவதும் அவர்களுக்கு உதவியாக இருந்துள்ளது. நாங்கள் ஒவ்வொருவரும் திறமையை மேம்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம் என்றார்.

உணர்ச்சிவசப்பட்ட நிலையில், அவுஸ்ரேலிய கப்டன் கில்கிறிஸ்ட் இருந்தாலும், இந்த வெற்றியை மிகச் சிறந்த வெற்றி என ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார்.

# வடமராட்சி வலய மட்ட உதைபந்தாட்ட முடிவுகள்

(வடமராட்சி)

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 16 வயதுப் பிரிவில் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியும், 18 வயதுப் பிரிவில் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் வெற்றிபெற்று சம்பியன்களாகத் தெரிவாகின.

கடந்த திங்கட்கிழமை வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 16, 18 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்ட இறுதியாட்டங்கள் மனோகரா மைதானத்தில் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்றது.

இதில் 16 வயதுப் பிரிவில் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரி மோதியது.

இடைவேளைக்கு முன்னதாக உடுப்பிட்டி அணியினரும், இடைவேளைக்குப் பின்னதாக தேவரையாளி இந்துக் கல்லூரி அணியினரும் சிறப்பாக விளையாடியிருந்த போதும், இரு அணிகளாலும் கோல் எதையும் போட முடியவில்லை. இதனால், தண்டனை உதைமூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது.

இதில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி தேவரையாளி இந்துக் கல்லூரியை 6:5 என்ற கோல்க் கணக்கில் தோற்கடித்துச் சம்பியன் ஆனது.

அதைத் தொடர்ந்து 18 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி மோதியது.

இடைவேளைக்கு முன்னதாக 21 ஆவது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியினரும், இடைவேளைக்குப் பின்னதாக 23 ஆவது, 25 ஆவது, 27 ஆவது நிமிடங்களில் கிடைத்த மூன்று வாய்ப்பையும் நழுவவிட்டதாலும், இரு அணியினராலும் கோல் எதனையும் போடமுடியவில்லை.

இதனால், தண்டனை உதைமூலம் வெற்றி தீர்மானிக்கப்பட்டது. இதில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியை 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக்கொண்டது. (12)

## உணவகங்களில் தொழில் புரிவோர்

# மருத்துவ பரிசோதனையின் பின்னரே தொழில் புரிய அனுமதிக்கப்பட வேண்டும்

## சுகாதாரப் பரிசோதகர் மகாதேவன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

உணவகங்களில் தொழில் பார்க்கும் ஊழியர்கள் - சுத்தம் பேணுவதுடன், மருத்துவப் பரிசோதனை செய்து, நோய் எதுவும் இல்லாதவர்கள் என இனங்கண்ட பின்னர் தான் தொழில்புரிய அனுமதிக்கப்படவேண்டும் என யாழ். மாவட்ட உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர் மகாதேவன் தெரிவித்தார்.

நல்லூர்ப் பிரதேசசபைக்குட்பட்ட கோண்டாவில், கொக்குவில் பகுதி உணவகம் மற்றும் வெதுப்பக உரிமையாளர்களுக்கான கலந்துரையாடலொன்று நேற்றுமுன்தினம் கொக்குவில் நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

வெதுப்பக உரிமையாளர்கள் தமது உற்பத்திப் பொருட்களை விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கும்போது, சரியான பாதுகாப்புடன் எடுத்துச் சென்று ஒப்படைக்கவேண்டும் விற்பனை செய்பவர்களும் உரிய முறையில் அவற்றைச் சுகாதார முறைப் படி பாதுகாத்து விற்பனை செய்ய வேண்டும்.

பல உணவகங்களின் முன்பக்கம் அழகாகவும், பின்பக்கம் அசுத்தமாகக் காணப்படுகின்றன. அதனை உரியவர்கள் தினமும் கவனித்து, சுத்தம் செய்ய வேண்டும். அடுத்த ஆண்டுமுதல் இவ்வாறு சுகாதார மற்ற முறையில் இயங்கும் கடைகள் அவதானிக்கப்பட்டு, திடீர் பரிசோதனை மேற்கொண்டு, உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், வியாபாரத்துக்கான உரிமமும் ரத்துச் செய்யப்படும்.

இது தொடர்பான விதிமுறைகளையும், ஆலோசனைகளையும் சுகாதார திணைக்களத்திலோ, பிரதேசசபை அலுவலகத்திலோ பெற்றுக்கொள்ளலாம் என்றும் பிரதேசசபைச் செயலாளர் பொ.வைரமுத்து தெரிவித்தார். (63)

### ஆங்கில அறிவை பரீட்சிப்பதற்கான பரீட்சை

யாழ். இந்துக் கல்லூரியில் தரம் 6 அனுமதி பெற விண்ணப்பித்துள்ள மாணவர்களுள் ஒரு பகுதியினர், ஆங்கிலமொழி மூலம் கற்பதற்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கான - ஆங்கில அறிவைப் பரீட்சிப்பதற்கான பரீட்சை எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைத் தினம் - சைவ பரிபாலன சபையால் நடத்தப்படும் சமய பாடப்பரீட்சை முடிவடைந்ததும், ஆங்கிலப் பரீட்சை காலை 10.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

### தெரிதல் ஆறாவது இதழ் வெளிவந்துள்ளது

அ.யேசுராசா வெளியிடும் 'தெரிதல்' ஆறாவது (ஐப்பசி - கார்த்திகை - 2004) இதழ் வெளிவந்துள்ளது.

இந்த இதழில் சோ.பத்மநாதன், செ.திருநாவுக்கரசு, செம்பியன் செல்வன், ச.இராகவன், கார்த்திகா, சத்தியன், பாணன் ஆகியோரின் படைப்புக்களும் -

தகவற்களம், படிப்பகம் போன்ற வழமையான அம்சங்களையும் உள்ளடக்கி வெளியாக இருக்கிறது.

அடுத்த இதழ் 16 பக்கங்களில் முதலாவது ஆண்டுச் சிறப்பிதழாக வெளிவர இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (206)

# குழாய்மூல நீர் நிறுத்தப்பட்டதால் நீண்டதூரம் நடக்கும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

கந்தரோடைப் பகுதிக்கு குழாய் மூலம் நன்னீர் வழங்கிவரும் சுன்னாகம் நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபையினர் - திடீரென நீர் வழங்குவதை நிறுத்திவிட்டதால், சுமார் ஆயிரம் குடும்பங்கள் நீரைப் பெற நீண்டதூரம் நாடி அலையவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் ஒரேயொரு கிணறு மட்டும் தான் நன்னீர் உள்ள கிணறாக இருப்பதால், அதைச் சுற்றி மக்கள் மழையில் நனைந்தபடி நின்று நீர் அள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், இந்தப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்தோர் முகாம்கள் இரண்டும் அமைந்திருப்பதால், அங்குள்ள மக்கள் தமது நீர்த் தேவையைப் பூர்த்திசெய்ய தோட்டக்கிணறுகளையே நம்பியிருந்தனர்.

ஆனால், தற்போது பெய்யும் கடும் மழைகாரணமாக தோட்டக் கிணறுகளும் நிரம்பி, அசுத்த நீர் உட்புகுவதால் - அவற்றிலும் நீர் பெறமுடியாது நீண்டதூரம் குடைகளுடனும், குடத்துடனும் நடந்து சென்று நீரைப் பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

குழாய் நீரைப் பெற்றுவரும் பாவனையாளர்கள் தாம் நிலுவைகளின்றி நீர் வரி செலுத்துவதாகவும் தெரிவித்தனர். (101)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்தியதாக இருவர் கோப்பாய் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் பலாலி வீதியில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் பலாலிவீதி திருநெல்வேலிப் பகுதியில் வைத்து - வவுனியாவைச் சேர்ந்த நபர் ஒருவரும், பலாலிவீதி திருநெல்வேலிப் பகுதியில் வைத்து - மானிப்பாயைச் சேர்ந்த ஒருவருமே கோப்பாய்ப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களை யாழ்.நீதிமன்றில் ஆஜர் செய்து மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தியபோது, மதுபோதையில் வாகனம் செலுத்தியதற்காக, முறையே வவுனியாவைச் சேர்ந்த நபரிடமிருந்து குற்றப்பணமாக 3 ஆயிரம் ரூபாவும், தர்மப் பணமாக ஆயிரம் ரூபாவும் அறவிடப்பட்டது.

இவரிடம் தலைக்கவசம், வாகன அனுமதிப்பத்திரம் என்பனவும் காணப்படாமைக்காக ஆயிரம் ரூபா மேலதிகமாக அறவிடப்பட்டது

அடுத்து மானிப்பாயைச் சேர்ந்த நபரிடமிருந்து குற்றப்பணமாக 2 ஆயிரம் ரூபாவும், தர்மப்பணமாக ஆயிரம் ரூபாவும் அறவிடப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (82)

# தொடரும் மழை காரணமாக அதிகரிக்கும் தொற்றுநோய்கள்

தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக, மக்கள் மத்தியில் தொற்று நோய்கள் அதிகரித்திருப்பதாக, வைத்தியசாலை பதிவேடுகளிலிருந்து தெரியவருகிறது.

காய்ச்சல், வாந்திபேதி, வயிற்றோட்டம், நீர்ச்சிரங்கு, நெருப்புக் காய்ச்சல் போன்ற பல நோய்களுக்காக, வைத்தியசாலைகளில் தினமும் பெரும் எண்ணிக்கையான நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நோயாளரின் இந்தத் தீடீர் அதிகரிப்பால் பனடோல் முதலிய மருந்துகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மக்கள் மழை காலத்தில் சுகாதாரப் பழக்கவழக்கங்களை அதிகளவில் கைக்கொள்ள வேண்டும்.

கொதித்து ஆறிய நீரைப் பருகுதல், மலசலகூடங்களையே கண்டிப்பாக பயன்படுத்துதல், உணவு உட்கொள்ள முன்னர் சவர்க்காரமிட்டு கைகால் கழுவுதல், சிறுவர்கள் இனிப்பு, மிக்சர், மாங்காய் போன்ற திறந்து விற்கப்படும் உணவுகளை உட்கொள்ளாது தவிர்ப்பதாலும், இந்தத் தொற்று நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியுமென சுகாதாரப் பகுதியினர் அறிவுரை வழங்கியுள்ளனர். (101)

## வேலணையில் கல்லூரி தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

வேலணை சேர்.வைத்தியலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவும், கல்லூரி தினமும் கல்லூரி அதிபர் பொ.அருணகிரிநாதன் தலைமையில் நாளை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கல்லூரி பழைய மாணவர், பிரதிப் பிரதம நிதிச் செயலர் நீப் கந்தவனம் மகாலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : மா.பிரவின்
முகவரி : யாழ்ப்பாணம்.

இரண்டாவது அகவையில்



பெயர் : ச.நிலக்ஷ்சன்
முகவரி : உடுப்பிட்டி.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
..............
பெற்றோர் ஒப்பம்

# குமுதினிப் படகு சேவையின் ஓய்வுநாள் மாற்றம்

நெடுந்தீவு மக்களின் சார்பாக நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபரால் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு அமைவாக, குமுதினிக் படகு சேவையின் ஓய்வு நாள் - செவ்வாய்க் கிழமையாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த மாற்றம் நவம்பர் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

இதன்படி நவம்பர் 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சேவை நிறுத்தப்படும். அதேவேளை, 4 ஆம் திகதி வியாழக்கிழமை சேவை நடத்தப்படும்.

இந்த ஓய்வு நாளின்போது வழமைபோல நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்க படகு- சேவையிலீடுபட ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

# வெளிநாட்டு சேவைகள் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இலங்கை வெளிநாட்டு சேவையின் 11 ம் தரத்துக்கு ஆட் சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்காக அரசாங்கசேவை ஆணைக்குழு சார்பாக பரீட்சை ஆணையாளர் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளார்.

அடுத்தவருடம் ஜனவரிமாதம் நடைபெறவுள்ள இந்தப் பரீட்சைக்கு இருபத்திரண்டு வயதுக்கும் முப்பது வயதுக்கும் இடைப்பட்ட பட்டதாரிகள் விண்ணப்பிக்க முடியும் தற்போது அரசசேவையில் இருப்பவர்களுக்கான வயதெல்லை நாற்பது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் யாவும் அடுத்த மாதம் முப்பதாம் திகதிக்கு முன்பாக பரீட்சை ஆணையாளர் நாயகம் பரீட்சைத் திணைக்களம் அமைப்பு வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவு, பெலவத்தை பத்தரமுல்லை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்களை இந்தமாதம் இருபத்தொன்பதாம் திகதி வெளியான அரச வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிடமுடியும். (31)

### கண்டெடுப்பு

தென்மராட்சி மினிபஸ்ஸில் பயணம்செய்த ஒருவர் தவற விட்ட மூக்குக் கண்ணாடி கண்டெடுக்கப்பட்டு, சங்கத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தவறவிட்டவர் கண்டி வீதி, சாவகச்சேரியிலுள்ள மினிபஸ் சங்கக் கட்டடத்தில் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் சங்கத்தினர் தெரிவித்தனர். (29)

# திருட்டுப் பொருட்கள் கோண்டாவிலில் மீட்பு

திருடப்பட்ட பொருட்களில் சில மீட்கப்பட்டு, திருடரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அண்மையில் கோண்டாவில் சந்தியிலுள்ள தில்லையம்பதி தொலைத்தொடர்பு நிலையத்தினுள் திருடப்பட்ட பொருட்களில் சிலவற்றை மீட்டுள்ளதோடு, சந்தேக நபரும் கைதுசெய்யப்பட்டார்.

திருடப்பட்ட கிற்காட்கள் மூலம் டயலொக் நிறுவனத்துக்கு சில இலக்கங்கள் கடை உரிமையாளரால் தெரிவிக்கப்பட்டு, அதனூடாகப் பயன்படுத்தப்பட்ட கைத்தொலைபேசியின் உதவியுடன் டயலொக் நிறுவனத்தால் பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததுடன், சந்தேக நபரும் அவரிடமிருந்த டிஜிற்றல் தொலைபேசிகளும், கிற்காட்களும் மீட்கப்பட்டன.

சந்தேக நபர் கொக்குவில் பகுதியில் வசிப்பவரென கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (82)




மானிப்பாய் மக்கள் வங்கியின் ஜயசிறி பரிசுத் திட்டத்தில் பரிசுத் தொகையான ஒரு லட்சம் ரூபா வழங்கும் நிகழ்வில் வடபிராந்திய உதவி முகாமையாளர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம். (91)

# விளையாட்டு அரங்கம்



## ஓங்கிய கைகள் ஒதுக்கப்பட்டன ஓர் ஒற்றைக் கை உயர்கிறது



ஷோன் பொலொக்
வலவித்தையில் வீரன்

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் அண்மைக் கால வீழ்ச்சி யைத் தொடர்ந்து, அதன் பயிற்றுனர் எரிக்சிமன்ஸ் ராஜி னாமாச் செய்தார். அந்த இடத்திற்குப் புதிதாக வந்திருப்பவர் றே ஜென்னிங்ஸ். இவர் ஒரு வித்தியாசமான போக்குக் கொண்ட நபராக இருப்பார் போலத் தெரிகிறது. எனது வீரர்கள் குளிர்பானம் கேட்டால் வயிறு நிறைய பச்சைத் தண்ணீர் குடியுங்கள் என்று கூறும் சுபாவம் உள்ளவன் நான். தென்னாபிரிக்க அணி வீரர்கள் சிலருடன் மிகக் கடுமையாகத் தான் நடந்து கொள்ள வேண்டும் போல இருக்கிறது என்கிறார் இவர்.

இவரது வார்த்தைப் பிரயோகங்கள் பலமட்டத்திலும் ஆச் சரிய அலைகளை ஏற்படுத்தியுள்ளது. 1980 ஆம் ஆண்டிலிருந்து உள்ளூர் மட்டப் பயிற்றுன ராக இருந்து வரும் இவர், இந்த வருடம் இவரது வழிகாட்டலின் கீழ் தென்னாபிரிக்க A அணி நியூசிலாந்து மற்றும் சிம்பாப்வே அணிகளை வீழ்த்தியது இதுவே தற்போதைய உயர்பதவிக்கும் காரணமாக அமைந்துள்ளது. இவர் பற்றிய கணிப்பீட்டுக்கு ஒரு உதாரணம் - 2001 ஆம் ஆண்டில் உள்ளூர்ப் போட்டியொன்றில் பவுண்சரின் மூலம் எதிரணி வீரரைத் தாக்குபவருக்கு போனஸ் உண்டு என்று அறிவிக்க, இளம் வீரர் அன்ரீநெல் எதிரணி வீரரை எகிறு பந்தால் தாக்க தலையில் அடிபட்டு விழுந்தவர் அலன் டொனால்ட். அதுவும் அன்ரீநெல் உடைய ஆதர்சம் அவரே. மைதானத்திலேயே அன்ரீ நெல் அழத்தொடங்கிவிட்டார். இந்த விடயம் தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையில் பெரும் சர்ச்சையை உருவாக்கியது. ஒரு வேடிக்கைக்காக அப்படிச் சொன்னேன் என்று சமாளித்தவர் தான் றே ஜெனிங்ஸ். அவர் தான் இன்றைய தென்னாபிரிக்கப் பயிற்றுனர்.



றே ஜெனிங்ஸ்
குருசிஷ்ய சிந்தனைகள்

அணி வீரர்கள் மீது, இடைநிலைப் பாடசாலைச் சிறுவர் மீது சட்டாம் பிள்ளைத் தனம் காட்ட முயற்சிக்கும் வாத்தியார் போன்ற இவரின் நடவடிக்கை ஜக் கலிஸ், ஷோன் பொலக், மார்க் பௌச்சர் போன்ற மூத்த உறுப்பினர்களால் எப்படி ஏற்றுக் கொள்ளப்படும் என்பது பெரியதொரு கேள்வியே.

விளையாட்டின் மீதான இச்சை, கௌரவம், ஒழுக்கம், உயர்பிம்பம், மகிழ்ச்சி என்பன ஒன்றிணைந்தாலே வெற்றிக் கனியைப் பறிக்க முடியும் என்கிறார் இவர்.

அண்மைக் காலத்தில் விளையாடிய ஐந்து டெஸ்ட் போட்டிகளில் நான்கில் தோல்வி பதினைந்து ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளில் பன்னிரண்டில் தோல்வி. இந்தச் சராசரியுடன் தள்ளாடும் தென்னா பிரிக்காவுக்கு ஒரு எழுச்சிதேவை தான்.

ஆனால் சர்வதேச மட்டத்தில் பேசும் பேச்சாக இவரின் கருத்துக்களை யாரும் ஏற்கத் தயாராயில்லை. அடுத்த வருடம் மே மாதம் மேற்கிந்தியத் தீவுகளில் தென்னாபிரிக்கா விளையாடவுள்ள நிலையில் இந்த இடைப்பட்ட காலத்தில் 13 டெஸ்ட் மற்றும் 15 ஒரு நாள் போட்டிகள் இவரின் பொறுப்பில் விடப்பட் டுள்ளன. ஏதோ எல்லாம் நன்றாக நடந்தால் சரி.

– ஜோஸப் கிருஷ்ணா.

## துடுப்புகள் கைமாறும்.. சுமைதாங்க முடியாமல் புடகே சில சுமயும் புதறும்



டில் ஹாரா பெனான்டோ
ஆயிரம் சிறகுகள

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே இடம் பெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியை அபாரமாக வென்று பாகிஸ்தான் மண்ணில் ஹெட்ரிக் சாதனை படைத்துள்ளது இலங்கை அணி. இந்த வெற்றியுடன் டெஸ்ட் தரப்படுத்தலில் இரண்டாம் இடத்தை இலங்கை அணி கைப்பற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த டெஸ்ட் போட்டியின் முத லுக்கும், முடிவுக்கும் எந்த வகையில் தொடர்பு படுத்துவது என்பதும் ஒரு கேள்விதான். ஏனெனில் முதல் இனிங்சில் இலங்கை அணி ஆகா என்று ஆச்சரியப்படும் அளவுக்கு ஓட்டங்களைக் குவித்து விடவில்லை. ஆக 243 ஓட்டங்கள் தான் அவர்களால் எடுக்க முடிந்தது.

இதில் ஒரு சிறப்பு, இளம் வீரர் திலான் சமரவீர அடித்த சதம் தான். மற்றப்படி ஏனைய துடுப்பாட்ட வீரர்கள் வெகு சாதாரணம் தான் என்பதை முழு எண்ணிக்கை எடுத்துக் காட்டும். அக்தர் ஒன்பதாவது முறையாக ஐந்து விக்கெட்டுக்களைச் சரித்து திருப்தியடைந்து கொண்டார்.

தொடர்ந்த பாகிஸ்தான் ஆட்டத்தில் தமது மண்ணில் நானூறு ஓட்டங் களுக்குமேல்எடுத்து, இலங்கை அணியை நெருக்கடிக்கு உள்ளாக்கப் போகின்றார்கள் என்று எதிர்பார்த்தாலும், இலங்கை அணிப் பந்து வீச்சாளர்களின் கூட்டுப் பொறுப்புத் திறமையால் பாகிஸ்தானை 264 ஓட்டங்களுடன் கட்டுப்படுத்த முடிந்தமை இலங்கை அணியின் திறமை தான்.

இலங்கையின் அபாரமான வெற்றிக்கான அடித்தளம் இரண்டாவது இனிங்சில் மொத்த ஓட்டங்களான 438 இல் சனத் ஜெயசூரிய குவித்த 253 ஓட்டங்களுடன்தான் ஆரம்பித்தது. சனத்தின் மீள் உயிர்ப்பும் இதனுடன் ஆரம்பிக்கிறது என்று கூறலாம். அது மட்டுமல்ல பாகிஸ்தான் அணி முடிந்தால் ஒரு வரலாற்றுச் சாதனை படைக்கட்டும் என்ற நிலைக்குள் தள்ளிவிட்டதும் அவர் தான். 1994 ஆம் ஆண்டில் அவுஸ் ரேலியவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் 314 அடித்தால் வெற்றி என்ற நிலையில் கை தளராமல் போராடி இறுதி ஒரேயொரு விக்கெட் மட்டும் எஞ்சிய நிலையில் அவுஸ்ரேலியாவைக் கவிழ் த்து சாதனை படைத்தவர்கள் பாகிஸ்தானியர்.

இன்று பத்து வருடத்தின் பின் 418 ஓட்டங்கள் பெற்றால், இலங்கை அணியைக் கவிழ்த்துச் சாதனை புரியலாம் என்று பாகிஸ்தான் நினைத்திருந்தால், அதில் தப்பில்லை.



சனத் ஜெயசூரிய
ஒவனர்தான் மனிதன்

அத்தகைய நபர்கள் அணியில் இல்லாமலும் இல்லை. ஆனால், பாகிஸ்தானின் சாதனைக் கனவு கலைந் தது இலங்கைப் பந்து வீச்சாளர்களால் தான். அதுவும் தில்ஹார பெர்னாண்டோ தலைப் பகுதியை தட்டிச் சரிக்க, கால் பகுதியை ரங்கன ஹேரத் வாரி விழுத்த, இதிலேயே எட்டு விக்கெட்டுக்கள் சரிய பாகிஸ்தானின் கனவு கலைந்தது. இலங்கை சாதனை படைத்தது. இருந்தாலும், இரண்டு இனிங்சிலும் ஓட்டம் எதுவும் பெறாமல், அணித் தலைவர் ஒரே பாணியில் ஒருவருடைய பந்து வீச்சிலே ஆட்டமிழந்ததும், ஒரு சுவாரஸ்யம் தான். சனத் மூத்த இளைஞராக விஸ்வரூபம் எடுத்ததும் சுவாரஸ்யம் தான். இலங்கைக் கிரிக்கெட் ரசிகர்கள் மகா சந்தோஷத்தில் இருப்பதும் ஒரு திருப்திதான்.

லெஸ்லி.

## ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமாய் எனக்கே என் முகம் வேறு வேறு தான்



செரினா வில்லியம்ஸ்
பறக்கும் பாவை

லொஸ் ஏன்ஜல்ஸ் ரெனிஸ் போட்டிக்கு விம் பிள்டன் சம்பியன் மரியா சரபோவா தகுதி பெற்றுள்ளார். இந்தப் போட்டி களுக்கு இவர் தகுதி பெறுவது இதுவே முதன் முறை யாகும்.

கடந்த வாரம் ஜூரிச் நகரில் நடைபெற்ற ரெனிஸ் போட்டியின் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றதன் மூலம், லொஸ்ஏஞ்ஜல்ஸ் போட்டிகளுக்குத் தகுதி பெற்றார் மரியா சரபோவா. ஏற்கனவே, தகுதி பெற்றுள்ளவர்கள் லின்ட்ஸே டெவன் போட், அமெலி மொறிஸ்மோ, அனா மிஸ் கினா, சுவெட்லானா குஷ் நெட் சோவா மற்றும் எலினா டெமென்டீவா ஆகியோர் மொத்தம் எட்டுப் பேர் போட்டியிடும் இந்தச் சுற்றுப் போட்டி யில், இன்னும் இரண்டு வீராங்கனைகள் தகுதிபெற வேண்டும்.

அந்த இடங்களுக்காகப் போட்டியிடுபவர்கள் செரினா வில்லியம்ஸ், வீனஸ் வில்லியம்ஸ், ஜெனிபர் கப்ரியாட்டி, பேரா சுவனறோவா.

இந்தப் போட்டிகள் அமெரிக்காவில் நவம்பர் 10 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை நடை பெறவுள்ளன. மகளிர் ஒற்றையர் பிரிவில் எட்டு மங்கையர்கள் போட்டியிட, தர வரிசையில் முதல் நான்கு இடம் வகிக்கும் இரட்டையர் ஆட்டமும் இடம்பெறும்.



மரியா ஷரபோவா
பனிப்புறா

இந்தக் கிண்ணத் தொடரில் யார் வெல்வார்கள் என்று இன்னும் எதிர்வு கூறப்பட வில்லையென்றாலும், விம்பிள்டன் சம்பியனை மரியா ஷரபோவா வெல்லக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது

ஆனால் ஒவ்வொரு ரெனிஸ் கிண்ணச் சுற்றுப் போட்டியிலும், எதிர்பாராத ஒவ்வொரு பெண்மணி வெற்றி பெற்று அதிர்ச்சி வைத்தியம் செய்து கொண்டிருக்கும் நிலையில் லொஸ் ஏஞ் ஜல்ஸ் யார் அதிர்ச்சி வைத்தியம் செய்யப் போகிறாரோ?

– ஜெயா

தலைப்புகள்:
நன்றி
கவிஞர் மு.மேத்தா

# வேர்வைத் துளிகளால் விதியை அழித்தெழுதும் வீர விடியல்களே வேண்டும்



ஷேன் வோண் திரிசூலம்

பங்களாதேஷுக்கு எதிராக டாக்காவில் நடை பெற்ற முதற் டெஸ்டில் நியூசிலாந்து பந்து வீச்சாளர் ஜேம்ஸ் பிராங்ளின் பங்களாதேஷ் வீரர்களான மஞ்சுரல் இஸ்லாம், முகமட் ரபீக், ரானா போன்றோரை ஆட்ட மிழக்கச் செய்ததன் மூலம் டெஸ்ட் போட்டியில் ஹெட்ரிக் சாதனை புரிந்தோர் வரிசையில் இணைந்து கொண்டார்.

இதன் மூலம் நியூசிலாந்து அணி சார்பில் ஹெட்ரிக் சாதனை படைத்த இரண்டாவது வீரர் என்ற பெருமையையும் பெற்றுக் கொண்டார். ஏற்கனவே இந்தச் சாதனையை 1976/77 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நியூசிலாந்தின் பீற்றர் பெத்ரிக் பாகிஸ்தானுக்கு எதிராக லாகூரில் நடை பெற்ற போட்டியில் நிலை நாட் டியிருந்தார்.

இந்த வகையில் முதன் முதலாக ஹெட்ரிக் சாதனையை நிலைநாட்டியவர் அவுஸ்ரேலியாவின் முன்னாள் வீரரான பேர்த். 1879 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இங்கிலாந்துடன் நடைபெற்ற போட்டியிலேயே இவர் இதனைப் புரிந்தார்.

இன்றுவரை டெஸ்ட் போட்டிகளில் இந்தச் சாதனையை 28 வீரர்கள் புரிந்துள்ளனர். இவர்களில் வசீம் அக்ரம், ட்ரம்பிள், மத்தியூஷ் போன்ற வீரர்கள் இரண்டு தடவை இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

இதில் 1912 /13 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் அவுஸ்ரேலிய முன்னாள் வீரர் மத்தியூஸ் தென்னாபிரிக்காவுடன் நடைபெற்ற போட்டியொன்றிலேயே இரட்டைக் ஹெட்ரிக் பெற்றது குறிப்பிடத்தக்கது.

வசீம் அக்ரத்தைப் பொறுத்தவரையில் 1999 ஆம் ஆண்டு ஆசியக் கிண்ண டெஸ்ட் சம்பியன் தொடரின் லீக்போட்டியிலும், இறுதிப் போட்டியிலும் இலங்கையுடனேயே இதனை நிகழ்த்தினார்.

இந்த ஹெட்ரிக் சாதனைப் பெருமை சில நாட்டின் நட்சத்திர அந்தஸ்துப் பெற்ற பந்து வீச்சாளர்களுக்குக் கிடைக்காமல், அந்த அணியின் வேறு சில பந்து வீச்சாளர்களுக்குக் கிடைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை அணியை எடுத்துக் கொண்டால் முரளிதரன் இந்தச் சாதனையை நிலை நாட்டவில்லை. இருப்பினும், நுவான் சொய்சா 1999 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிம்பாப்வேயுடன் நடந்த போட்டியொன்றில் இதனைப் புரிந்திருந்தார்.

இதில் விசேட அம்சம் என்னவெனில் - சிம்பாப்வே அணியினர் ஒரு ஓட்டத்தைக் கூட பெறாத நிலையிலேயே இவர் மூன்று விக்கெட்டுக்களையும் ஹெட்ரிக் முறையில் சாய்த்திருந்தமையே ஆகும்.



வாசிம் அக்ரம் தொடர் இடி

அவ்வாறே நியூசிலாந்து அணியின் ரிச்சாட் ஹெட்லியோ, இந்தியாவின் கபில்தேவோ இதனை நிகழ்த்தவில்லை. இந்திய அணி சார்பாக ஹர்பஜன் சிங்கே இதனை செய்திருந்தார். 2001 ஆம் ஆண்டு அவுஸ்ரேலிய அணி இந்தியா வந்தபோதே கொல்கத்தாவில் இந்தச்சாதனையை புரிந்திருந்தார்.

ஆனால் அவுஸ்ரேலிய நட்சத்திர சுழற் பந்து வீச்சாளர் ஷேன் வோன் 1994/95 ஆம் ஆண்டு காலப்பகுதியில், இங்கிலாந்துக்கெதிரான ஆஷஸ் தொடரில் ஹெட்ரிக் சாதனையைப் புரிந்துள்ளார்.

கடந்த ஒரு தசாப்த காலத்தை எடுத்துக் கொண்டால் இந்திய, அவுஸ்ரேலிய, பாகிஸ்தான், இலங்கை அணிகளில் உள்ள வீரர்களில் ஒருவராவது இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளனர்.

ஆனால், தென்னாபிரிக்காவை பொறுத்தவரை 1960 ஆம் ஆண்டில் முன்னாள் வீரரான கிரிஃபன் இங்கிலாந்துக்கெதிராகப் பெற்ற ஹெட்ரிக்கைத் தவிர வேறெந்த வீரரும் இற்றைவரை இந்தச் சாதனையை நிலைநாட்டவில்லை என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

— விமலன்.

# நம்பிக்கை நார் மட்டும் நம் கையில் இருந்தால் உதிர்ந்த பூக்களும் ஒவ்வொன்றாக வந்து ஒட்டிக்கொள்ளும் கழுத்து மாலையாய் தன்னைத்தானே கட்டிக்கொள்ளும்

ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் எல்லோரையும் ஏமாற்றி விட்டவர் பவுலா றெட்கிளிப். 30 வயதான இந்த அம்மையார் ஏதென்சில் மரதன் வெல்வார் என்பது எதிர் பார்த்திருக்க, இடைநடுவில் ஓட்டத்தைக் கைவிட்டு அவரது ரசிகர்கள் எல்லோரையும் ஆழ்ந்த துக்கத்தில் ஆழ்த்தியவர்.

| பதக்கப்பட்டியல் | | | |
|---|---|---|---|
| வேர்ல்ட் சம்பியன் ஷிப்ஸ் | 10,000 மீற்றர் | வெள்ளி | 1999 |
| லண்டன் மரதன் | | தங்கம் | 2002,2003 |
| சிக்காகோ மரதன் | | தங்கம் | 2002 |
| ஐரோப்பிய சம்பியன் ஷிப்ஸ் | 10000 மீற்றர் | தங்கம் | 2002 |
| கொமன் வெல்த் போட்டிகள் | 10000 மீற்றர் | தங்கம் | 2002 |
| WORLD CROSS COUNTRY | 8 கிலோமீற்றர் | தங்கம் | 2001,2002 |
| EUROPEON CROSS COUNTRY | | தங்கம் | 1998,2003 |
| WORLD HALF MARATHAN | | தங்கம் | 2000,2001,2003 |

அது மட்டுமல்ல 10,000 மீற்றர் ஓட்டத்திலும் பங்கு கொள்ள முடியாமல் போனவர். இந்த நிலையில் இவரது தடகள வாழ்க்கை இத்துடன் முடிவடைந்து விடும் என்றும் எதிர் பார்க்கப்பட்டது.

மரதன் ஓட்டப் போட்டியைப் பொறுத்து 2003 ஆம் ஆண்டு லண்டன் மரதன் ஓட்டப் போட்டியின் போது இவர் எடுத்துக் கொண்ட நேரம் தான் இன்றுவரை உலக சாதனை நேரமாகக் கணிக்கப்பட்டுள்ளது.

26.2 மைல்கள் தூரத்தை 2 மணித்தியாலம் 15 நிமிடம் 25 செக்கன்களில் கடந்தவர்.



பவுலா றெட்கிளிப் ஆயிரம் சிறகுகள்

தற்போது ஒரு வீச்சுடன் வருகிறார் றெட்கிளிப். நவம்பர் 7 ஆம் திகதி அமெரிக்க நியூயோர்க் நகரத்தில் நடைபெறவுள்ள மரதன்போட்டி களில் பங்கு கொள்வதென்று தீர்மானித்துள்ளார் இவர்.

அமெரிக்காவைச் சேர்ந்த வெண்கலப் பதக்கம் வென்ற டீனாகெஸ்டர், அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த பெனிற்றா ஜோன்சன் இருவரும் பவுலாவிற்குப் பெரும் சவாலாக இருப்பார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஏதென்சில் 23 ஆவது மைல் தூரத்தைக் கடந்த போதுகடும் வெப்பம் இவரது வெற்றியைப் பறித்தது. அதே போன்று ஐந்து நாட்களின் பின் கடந்து உடல் நிலைத் தளர்வால் 10,000 மீற்றர் ஓட்டத்தையும் இவர் தவற விட்டார்.

இந்த முறை அப்படியாக ஏதும் தடைகள் வந்து விடக் கூடாது என்பதே இவரது ரசிகர்களின் விருப்பம்.

— மரியா.

# வாலிபத்தின் தூது வந்து சேர்கிறது

இலங்கை கிரிக்கெட் விடயங்கள் வெளிப்படையானவையே என்று கூறிக் கொண்டாலும் உள்ளுக்குள் உள்ள ஆதங்கங்கள், மன உளைச்சல்கள், பொறாமைகள், சுயநலங்கள் மெல்ல மெல்ல வெளிவந்து கொண்டிருக்கின்றன போலத் தெரிகிறது.

தற்போதைய பிரதம தெரிவாளர் இலங்கையின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அஸந்த டிமெல். இவர், இள இரத்தம் இலங்கை அணியில் புகுத்தப்பட வேண்டும் என்ற கொள்கை கொண்டவர். ஆனால் இன்றைய அணியில் உள்ள மூத்த வீரர்கள் அதனைப் பெரிதும் ஏற்றுக்கொள்வதாக இல்லை போலத்தெரிகிறது.

அதாவது இளம் வீரர்கள் அணிக்குள் நுழைவதை ஒரு சில மூத்த வீரர்கள் விரும்பாமைக்குக் காரணம் –தமது பதவி பறிபோய்விடும் என்ற அச்சத்தினாலாகும். இதனால் தான் இவர்கள் தெரிவுக்குழுவின் இளமையான சிந்தனைக்கு ஒத்துப்போவதில்லை போலத்தெரிகிறது. அப்படியானால் இவர்கள் எவ்வளவு காலத்திற்குத் தாக்குப்பிடிக்க முடியும் என்பது பெரிய வினா? இளம் இரத்தம் மாற்றீடு இல்லாமல், ஒரு நாள் இலங்கைக் கிரிக்கெட் அணி தொப்பென்று விழுவதா என்று தான் விமர்சகர்கள் அங்கலாய்க்கின்றார்கள்.

தெரிவுக் குழுவினர் இளமை நோக்கி ஓடிக்கொண்டிருக்க அணி சார்ந்தோர் விடாப்பிடியாக நிற்க – இந்த இழுபறி நிலை நீங்கினால்த் தான் இலங்கைக் கிரிக்கெட்டைப் பொறுத்து சுபீட்சமான நிலை ஒன்று உருவாகும் என்பது முடிந்த முடிவு. இந்த வகையில் தான் பாகிஸ்தானில் நடைபெறும் டெஸ்ட் போட்டிகளுக்கு ஜெகான் முபாரக், திலான் சமரவீர, இயன் டானியல், லஸித மலிங்க ஆகியோர் உள்வாங்கப்பட்டுள்ளார்கள்.



அத்தபத்து முதுசமா சீதனமா

இதேவேளை, இலங்கையின் முதல்தர விக்கெட் காப்பாளராகத் திகழ்ந்தவர் பிரசன்ன ஜயவர்த்தன. ஆனால் றொமேஷ் களு விதாரண மீண்டும் மீண்டும் உள்வாங்கப்படுகிறார். இது பொறுத்தும் கருத்து வேறுபாடு உண்டு.

இளம் வீரர்கள் என்று குறிப்பிடும் போது ஒரு பெரிய பட்டியலே தெரிகிறது. ஆனால் இவர்களையெல்லாம் மாற்றாந் தாய் மனப்பான்மையோடு நடத்தப்பட்டவர்கள் என்று கருதப்படுபவர்கள். மைக்கல், வன்டோட், இந்திக டீசேரம் சமரசில்வா, முத்து முதலிகே, புஸ்பகுமார, நிமேஷ், பெரேரா, பிரபாத் நிஸ்ஸங்க, சரித்தபுத்திக இவ்வாறாக பட்டியல் நீண்டு செல்கிறது.

அஸந்த டிமெல் மிகுந்த மனவருத்தத்துடன் பின் வருமாறு கூறுகிறார். அணித்தலைவர் அத்தப் பத்துவையும், அணி முகாமைத்துவத்தையும் இந்த விடயத்தில் சமரசம் செய்ய எவ்வளவோ முயன்றேன். ஆனால் அது நடைபெறுவதாகத் தெரியவில்லையே என்று அங்கலாய்க்கிறார். இந்த நிலையில் தெரிவுக் குழு மிகக் கடுமையானதொரு போக்கைக் கையாள வேண்டும் போலத்தெரிகிறது. என்கிறார்கள் நோக்கர்கள்.

இறுதியாக விமர்சகர் இன்றைய அணித் தலைவரையே ஒரு உதாரணமாக்கி ஒரு வினாவை எழுப்புகின்றார். நீங்கள் முதல் ஆறு டெஸ்ட் போட்டி களில் தடம் புரண்ட போது உங்களை அணியில் இருந்து நீக்கி இருந்தால், இன்று இந்த நிலையில் நீங்கள் இருக்கமுடியுமா? என்பதே அந்தக் கேள்வி. ஆகவே, தனது கடந்த காலத்தையும் யதார்த்தத்தையும் புரிந்து கொண்டு இளைஞர்களை உள்வாங்க முன்வர வேண்டும் என்றும் கோரிக்கை விடப்படுகின்றது. இல்லாவிட்டால் இந்திய - அவுஸ்ரேலிய, டெஸ்ட் போட்டியின் சிறிய இடைவேளையின் போது ஷெப் பர்ட் ஜயாவுக்கு பிளாஸ்ரிக் கதிரை மைதானத்துக்குக் கொண்டு போனது போல, இலங்கை அணி வீரர்களும் இளைப்பாற கதிரைகள் கொண்டு போக வேண்டியிருக்கும்.

— நிர்மலன்.



இளசுகளின் காலம்

விளையாட்டு அரங்கம்

# சவேரியார்புரம் கிராமத்தை புனரமைக்க நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் பிரதேசத்தில் கடந்த காலங்களில் நடைபெற்ற போரால் சிதைவடைந்த கிராமங்களை இனங கண்டு 'சோஆ' நிறுவனத்தால் புனரமைக்கும் பணிகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

முசலி பிரதேச செயலர் பிரி வுக்குட்பட்ட சவேரியார்புரம் கிரா மம் - இதில் தெரிவு செய்யப்பட்டு, நிகொட் நிறுவன திட்டத்தின் கீழ், 5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் முன்பளளி அமைத்தல், நூலகம் அமைத்தல், குடிநீர் வசதி செய்தல், மினசார வசதி ஏற்படுத்தல், கிராம முன் னேற்ற சங்கம் அமைத்தல் போன்ற அடிப்படைவசதிகளை ஏற்படுத்தும் செயற்பாடுகள் இந்த அமைப்பி னூடாக முன்னெடுக்கப்பட்டு வரு கிறன.

## மூவர் காயம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் விபத்துக் குள்ளாகியதில் மூவர் காயம டைந்தனர்.

இந்தச் சம்பவத்தில் ஒட்டு சுட்டானைச் சேர்ந்த வெள்ளி யம்பலம் பிரதீபன் (வயது 25) வெள்ளியம்பலம் புனிதன், (வயது 17), தனபாலசிங்கம் சஞ்சீவன் (வயது 18) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர்.




# பொதுக் கிணற்றுக்குள் கழிவுநீர் உட்கசிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுக் கிணறுகளினுள் கழிவு நீர் உட் கசிந்து செல்கிறது.

இந்த மாவட்டத்தின் தொண்ட மான்நகர், செல்வாநகர், யூனியன் குளம் ஆகிய இடங்களில் இந்த ஆண்டு அமைக்கப்பட்ட புதிய கிணறுகளுக்குள் - மழை வெள் ளம், கழிவு நீர் என்பன உட் கசிந்து செல்வதை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறு கிணற்றின் நீர் கசிந்து செல்வதற்கு உரிய முறை யில் புனரமைக்கப்படாமையே காரணமாகும் எனச் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

# வவுனியா மாவட்ட இளம் சமூகத்தினர் சமூகச் சீரழிவுகளை நோக்கி செல்கின்றனர்

## நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம்

வவுனியா மாவட்டத்திலுள்ள சமூகத்தினர் - சமூகச் சீரழிவு களை நோக்கி திசை திருப்புவ தாக வன்னி நாடாளுமன்ற உறுப பினர் விநோனோதராகலிங்கம் தொ வித்தார்.

கடந்த புதன்கிழமை நடை பெற்ற கல்வி மேம்பாட்டுப் பேர வையின் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

இளம் சமூகத்தினர் சமூகச் சீரழிவுகளை நோக்கித் திசை திருப்பப்படுவதைத் தவிர்க்க, பொறுப்புள்ள அனைவரும் அதிக கவனம் செலுத்துவதோடு, குறிப் பாக பெற்றோரும் தமது பிள்ளை களை நல்வழிப்படுத்தும் செயற் பாடுகளில் தீவிரப்படுத்த வேண் டும் என அவர் மேலும் தெரி வித்தார்.

## வன்முறை தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு

மன்னார் பிரதேசத்தில் குடும்ப வன்முறை தொடர்பான விழிப் புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற வுள்ளது.

எதிர்வரும் 3 ஆம் திகதி மன்னார் அல்தாகூர் மத்திய மகா வித்தி யாலயத்தில் காலை 10 மணிக்கு சோஆ சங்கத்தால் 'குடும்ப வன்முறைகளைக் குறைபபதற்கு ஒன்றிணைவோம்' என்ற தொனிப் பொருளில் கீழ் இந்த விழிப்புணர் வுக் கருத்தரங்கு இடம் பெறவுள் ளது.

## புதிய அறுவடை இயந்திரம்

மன்னார் ஆண்டான் குளப்பிர தேசத்தில் விவசாயிகளால் மேற் கொள்ளப்பட்ட நெற்செய்கையை அறுவடை செய்வதற்கு புதிய அறுவடை இயந்திரம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் முதற் தட வையாக இந்த அறுவடை இயந் திரம் மூலம் நெல் அறுவடை செய் யப்படவுள்ளது.

இந்த அறுவடை இயந்திரம் வன்னி வேளான் தொழில் நுட்ப நிறுவனத்தால் அறிமுகம் செய் யப்பட்டுள்ளது.

# மருத்துவமாது பரீட்சையில் சித்தியடைந்தோரில் இரண்டாவது தொகுதியினரின் பெயர் விபரங்கள்

மாகாண சுகாதார சேவை கள் அமைச்சால் அண்மையில் நடை பெற்ற மருத்துவமாது நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்தவர்க ளுக்கான முதலாம் கட்டப் பயிற்சி வகுப்பு - வவுனியா பொதுத் தாதியர் பயிற்சி மண்டபத்தில் கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் நடை பெற்று வருகிறது.

இந்தப் பயிற்சித் திட்டத்தின் இரண்டாம் தொகுதிக்கான பெயர் விபரங்கள் வெளியாகியுள்ளன.

கிளிநொச்சி மாவட்டம் கருணா நிதி கலைவாணி (ஜெயந்திநகர் - கிளி நொச்சி), குகதாசன் சுகிர்தா (ஜெயந்திநகர் - கிளிநொச்சி), ஜொய்சி சௌதாமினி ஞானப்பிரகா சம் (ஜெயந்திநகர் - கிளிநொச்சி), தியாகராசா றஞ்சனி (தம்பண்ணை - புளியங்குளம்- செட்டிகுளம்), மனியறெமா சூரியர் ஜெயசீலி (குமுழமுனை- பல்லவராயன்கட்டு, பூநகரி), கந்தசாமி சுமிதா (குஞ்ச ரபவனம் - பன்றிசுட்டான், கண்டா வளை), தங்கேஸ்வரன் தாரணி (உருத்திரபுரம் - கிளிநொச்சி), கார்த்திகேசு திலகேஸ்வரி (இரத் தினபுரம் - கிளிநொச்சி), இரா சேந்திரம் மதுமிதா (புதிய புன்னை நீராவி, விஸ்வமடு), மரியாம் பிள்ளை தன்மலோஜினி (உதய நகர் கிழக்கு - கிளிநொச்சி).

மரியாம்பிள்ளை சத்தியராணி (உதயநகர் கிழக்கு- கிளிநொச்சி), சீவரத்தினம் கீதலக்ஷனா (செட்டி யாகுறிச்சி- பூநகரி), நல்லையா சிவஞான கலாராணி (தொட்டியடி- விஸ்வமடு), தெய்வேந்திரன் கேதீஸ்வரி (179, உதயநகர் - கிளி நொச்சி), நல்லையா சிவரூபி (10/ 2 தொட்டியடி - விஸ்வமடு),

இரத்தினசிங்கம் யுவராணி (கள் ளப்பாடு - (முல்லைத்தீவு), செல்லத் துரை பாமினி (மாமூலை, முள்ளிய வளை), பாலகிருஷ் ணன் சத்திய பிரபா (கணுக்கேணி கிழக்கு - முள்ளியவளை, முல்லைத்தீவு), தட்சணாமூர்த்தி கிருஷாந்தி (3 ஆம் வட்டாரம்- முள்ளியவளை), வரதராஜா வியறறைஸ், சிவனசுந் தரம் சுகந்தினி (8 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு), தேவதாஸ் ஜெனிட்ரா (செல்வபுரம் - (முல்லைத்தீவு) இரத்தினராசா பாரதி (இல :115 பாலிநகர் வவு னிக்குளம் - செல்வபுரம்), சிங்கம் தனலட்சுமி (இல.143, பாண்டி யன்குளம் - நெட்டாங்கண்டல்) ஆகியோரின் பெயர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பெயர்ப்பட்டியலில் உள்ளவர்கள் - வவுனியா பொதுத் தாதியர் பயிற்சி மண்டபத்துக்கு நாளை வருமாறு கிளிநொச்சி மாகாண சுகாதாரசேவைப் பிரதிப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டார்.

## கிராம மக்கள் அன்பளிப்பு

மன்னார் பள்ளமடு கிராமிய வைத்தியசாலைக்கு இந்தப்பகுதி மக்கள் சிறுதொகைப் பணத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

அண்மையில் திறந்து வைக் கப்பட்ட இந்த வைத்தியசாலைக்கு விடத்தற்தீவு கிராம மக்கள் 8 ஆயிரம் ரூபாவும், இலுப்பைப் கடவை மக்கள் ரூபா 5 ஆயி ரத்து 750 ரூபாவும் கள்ளியடி கிராம மக்கள் 5 ஆயிரம் ரூபாவும், கத்தாளம்பிட்டி கிராம மக்கள் 2 ஆயிரம் ரூபாவையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.



கிளிநொச்சி 155 ஆம் கட்டைப் பகுதியில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள நிரந்தர தொலைத்தொடர்பு கோபுரத்தை படத்தில் காணலாம்.



வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் அமரர் வீரகத்திப்பிள்ளை யின் ஞாபகார்த்தமாக அவரின் குடும்பத்தால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து பாடசாலையில் நுழைவாயிலுக்கான அடிக்கல்நாட்டு வைபவத்தில் பாடசாலையின் அதிபர் அடிக்கல் நாட்டுவதையும், அமரரின் மகள் அடிக்கல் நாட்டுவதையும் படங்களில் காணலாம்.

படங்கள் : வே.சீலன்

# மாவீரர் வெற்றிக்கிண்ணத்துக்கான போட்டிகளில் பங்குபற்றும் கழகங்களை பதிவு செய்ய கோரிக்கை

மன்னார் மாவட்ட விளையாட் டுத் துறையால் தமிழீழ விளை யாட்டுத்துறையின் ஏற்பாட்டில் மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக் கான விளையாட்டுப் போட்டிகள் எதிர் வரும் 10 ஆம திகதிமுதல் 25 ஆம் திகதிவரை நடைபெறவுள் ளன.

இந்த மாவட்டத்திலுள்ள அனைத்து விளையாட்டுக் கழ கங்களும் கலந்துகொள்ளும் இந்தப் போட்டியில் -

ஆண்களுக்கான 11 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி, பெண்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டி போன்ற போட்டி கள் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இது தொடர்பான விபரங்களை மன்னார் மாவட்ட அரசியற்துறை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு, பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று கிளிநொச்சி மாவட்டத்துக்கான மாவீரர் வெற் றிக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் பங்கு பற்ற விரும்பும் கழகங்களை எதிர்வரும் 3 ஆம் திகதிக்கு முன்னதாக கிளிநொச்சி மாவட்ட விளையாட் டுத்துறையுடன் தொடர்புகொள்ளு மாறு, கிளிநொச்சி மாவட்ட விளை யாட்டுச் சபையினர் தெரிவித்துள் ளனர்.

# ஊற்றுப்புலம் கிராம மக்களுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஊற்றுப்புலம் கிராம மக்களுக்கு, விவசாய உள்ளீடுகள் வழங்கப்பட்டன.

உணவு உற்பத்தியை மேம் படுத்தும் நோக்கில், கிளிநொச்சி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், உணவு விவசாய நிறுவனமும் இணைந்து மேற் கொண்டுவரும் திட்டத்தின்கீழ், கடந்த வியாழக்கிழமை ஊற்றுப் புலம் பொது மண்டபத்தில் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

இதில் ஒவ்வொரு பயனாளிக ளுக்கும் 700 ரூபா பெறுமதியான விதைப் பொருட்கள் மற்றும் விவசாய உள்ளீடுகள் வழங் கப்பட்டன.

இதில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அக்க ராயன் பிரதேச இணைப்பாளர் வி.பாஸ்கரன், உலக உணவுத் திட்டப் பிரதிநிதிகள், கமக்கார அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்
தெற்றுஎன்க மன்னவன் கண்.*

*திருக்குறள்*

# நமது நோக்கு

## ஜனாதிபதியை பொறிக்குள் தள்ளவைக்கும் ரணிலின் புதிய அரசியல் காய்நகர்த்தல்!

அரசியல் யாப்பில் மாற்றம் செய்வது தொடர்பாக அண்மைக் காலத்தில் அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீரவும் ஏனைய முக்கியஸ்தர்களும் அடிக்கடி புதிய புதிய கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இந்தக் கருத்துக்களின் பின்னணியில் பல்வேறுபட்ட நோக்கங்கள் இருக்கின்றன என்பது உண்மையே. இதில் இரண்டு விடயங்களை நாம் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஒன்று – அரசியல் யாப்பில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் தனது அரசியல் எதிர்காலத்தை ஸ்திரப்படுத்திக்கொள்ள ஜனாதிபதி தீவிரமாக முயல்கிறார் என்பதேயாகும்.

இரண்டாவது – அரசியல்யாப்புச் சீர்திருத்தம் என்ற பெயரில் தனது தற்போதைய பதவிநிலையை மேலும் சில வருடங்கள் தக்கவைத்துக்கொள்ள முனையும் ஜனாதிபதி, அதன் மூலம் சமாதான முன்னெடுப்புக்களையும் இழுத்தடிக்க முயல்கின்றார் என்றே கூறவேண்டும்.

எனினும் சகல வழிமுறைகளையும் ஜனாதிபதி எதிர்க்கட்சியை பலவீனப்படுத்தி எதிர்கால அரசியலில் அவர்களை வலுவற்றவர்களாக்கும் தொலைநோக்கு மூலோபாயத் திட்டத்துடன் கையாள முனைகிறார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.ஆனால் அவரது திட்டம் சாத்தியமாகும் அளவுக்கு ரணில் விக்கிரமசிங்க விட்டுக்கொடுப்பவராகத் தெரிய வில்லை.

இம்முறை அவர் தனது அரசியல் வியூகங்களை மிகவும் முன்னெச்சரிக்கை உணர்வுடன் – ஜனாதிபதியை எல்லா வகையிலும் நெருக்கடிக்குள்ளாக்கும் திட்டங்களுடன் அமைத்து வருகின்றார் என்றே கூறவேண்டும்.

தனது தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியை எந்தவிதமான நியாயபூர்வமான காரணமுமின்றி சொந்த ஆட்சியதிகார அபிலாஷைகளை எட்டவும் சமாதான முயற்சிகளைக் குழப்பவுமே சட்டபூர்வமான அரசியல் சதி நடவடிக்கையொன்றின் மூலம் கலைத்த ஜனாதிபதியின் துரோகத்தனத்தை எந்தவகையிலும் மறக்கவோ, மன்னிக்கவோ அவரால் முடியவில்லை.

நோர்வே அரசின் அனுசரணையுடன் தொடங்கிய சமாதானப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளை ஆரம்பம் முதலே எதிர்த்து – ஜே.வி.பியினரின் ஆதரவுடன் தன்னை ஒரு பௌத்த சிங்கள இனத்தின் துரோகியாக – விடுதலைப் புலிகளிடம் வடக்கு கிழக்கை தாரைவார்த்துக்கொடுக்க முனையும் ஒருவராகப் பிரசாரம் செய்து தேர்தலில் தன்னைத் தோற்கடித்த அதே ஜனாதிபதி, தான் நிராகரித்த புலிகள் சார்பானவர் என வர்ணித்த அதே சொல்ஹெய்ம் அவர்களை மீண்டும் அழைத்து சமாதானப் பேச்சுக்களுக்கு அனுசரணையாளர்களாகச் செயற்பட அங்கீகாரமளித்ததை ரணிலால் ஏற்றுக்கொள்ள முடியாதுபோனதில் வியப்பில்லை.

எனவே ஜனாதிபதியை அவரின் அரசியல் நகர்வுகளை ரணில் முறியடித்து அவருக்கு சிக்கலை ஏற்படுத்த முனைவதில் வியப்பே கிடையாது – அது அவரது அரசியல் தேவையேயாகும்.

தற்போது அரசாங்கம் குயுக்தியான அரசியல் தந்திரோபாயங்களை ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரவலுவைப் பயன்படுத்திக் கையாண்டு அரசியல் அமைப்பில் குறுக்கு வழியில் மாற்றங்களைக் கொண்டுவரும் திட்டத்தை முறியடிப்பதில் அவர் மிகவும் தீவிரமாகச் செயற்படுகிறார் என்றால் அதில் மிகையில்லை.

அரசாங்கம் தந்திரோபாய முறையில் நேர்மையற்ற வழிகள் மூலம் அரசியல் யாப்பில் திருத்தத்தையோ மாற்றத்தையோ கொண்டுவரும் செயற்பாட்டில் இறங்குமேயானால் அதன் விளைவுகள் பாரதூரமானதாக இருக்கும் என்று எச்சரித்துள்ள ரணில் விக்கிரமசிங்க, அத்தகைய முயற்சிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு தனியாக அரசியல் நிர்ணய சபையொன்றை அமைக்கும் முயற்சிக்கே இட்டுச் செல்வதுடன் அதனை எவ்வகையிலும் எவராலும் தடுக்கமுடியாதென்றும் கூறியுள்ளார்.

ஏற்கனவே இடைக்கால நிர்வாக அதிகாரசபையின் அடிப்படையில் அரசு – விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்குமேயானால் அதற்கு தான் முழுமையான ஆதரவினை வழங்கத் தயாரென அறிவித்ததன் மூலம் ஜனாதிபதிக்கு ஒரு நெருக்கடியான சூழலை ஏற்படுத்தியுள்ளார் என்றே கூறவேண்டும்.

இந்த நிலையில் ரணிலின் இப்புதிய எச்சரிக்கையானது ஜனாதிபதிக்கு எத்தகைய நெருக்கடியை உண்டுபண்ணப் போகிறது என்பது இப்போதைக்கு ஊகிக்க முடியாவிட்டாலும் அவ ருக்கு அரசியல் ரீதியில் பல்வேறு தரப்பிலிருந்தும் அழுத்தங்கள் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதை மறுக்க முடியாது.

வடக்கு கிழக்கில் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை அமைப்பதற்காகவே 22 நாடாளுமன்ற உறுப்பி னர்களை தெரிவுசெய்து தமிழ்மக்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்பியுள்ளார்கள் என சர்வதேச சமூகத்தவர் மத்தியில் கூறியுள்ள ரணில், இதன் அடிப்படையில் எந்த நடவடிக்கையை ஜனாதிபதி ஆரம்பித்தாலும் அதற்கு ஆதரவளிக்கத் தயார் என மீண்டும் வலியுறுத்தியுள்ளமையானது இன்றுள்ள சூழலில் முக்கியத்துவமிக்க ஒன்றேயாகும்.

ரணிலின் இப்புதிய அரசியல் வியூகத்தினுள் ஜனாதிபதி சிக்குவாரா? ரணிலின் எச்சரிக்கை அவருள் புதிய சிந்தனைகளைத் தோற்றுவிக்குமா?

பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## நாடும் நடப்பும்




### இடைக்கால நிர்வாகம் குறித்த

## அரசின் மாற்று ஆலோசனைகள் ஜனவரியில் புலிகளிடம் கையளிப்பு

இடைக்கால நிர்வாகம் தொடர்பான மாற்று ஆலோசனைகளை ஜனவரி மாதமளவில் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபை பற்றிய ஆலோசனைகளை ஆராய்ந்து பார்ப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள அரசதரப்புச் சட்ட வல்லுநர்கள் 12 பேர் அடங்கிய குழுவினரின் ஆலோசனைகள ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மாற்று யோசனைகள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளோடு கலந்துரையாடுவதற்கும் ஜனாதிபதி தீர்மானித்துள்ளார். ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் கருத்தை அடிப்படையாகக்கொண்டு தனது மாற்று யோசனைகளைத் தயாரிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## பகுதிநேர விரிவுரையாளர்களை பதிவு செய்வதற்கு நடவடிக்கை!

(கொழும்பு)

இலங்கையிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கு எதிர் வரும் 2005 ஆம் ஆண்டுக்கான அறிவாற்றல் வளமுடைய வெளியாரை விரிவுரையாளராக, போதனாசிரியர்களாகப் பதிவு செய்வதறகான நடவடிக்கைகளைத் திறன் அபிவிருத்தி தொழில்சார் மற்றும் தொழில்நுட்பக்கல்வி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

ஒவ்வொரு தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் நிலவும் வெற்றிடங்கள் பற்றிய விபரங்களையும், மேலதிக தகவல்களையும் அந்த அந்தத் தொழில்நுட்பக்கல்லூரி அதிபர்களிடம் இருந்து டிசம்பர் 3 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளமுடியும். விபரங்களைப்பெற விரும்புபவர்கள சுயமுகவரியிட்ட 9"x4" அளவுடைய கடித உறையை, உரிய தொழில் நுட்பக்கல்லூரி அதிபருக்கு அனுப்பிவைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

தெரிவுகள் யாவும் உரிய கல்லூரிகளது அதிபர்களால் நேர்முகப் பரீட்சை ஒன்றினூடாக மேற்கொள்ளப்படும். தெரிவு செய்யப்படுபவர்களது தகைமைகளுக்கு ஏற்ப ஒரு மணித்தியாலத்துக்கு 125 ரூபா முதல் 250 ரூபா வரை கொடுப்பனவு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது சேவையிலுள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை தலைவருடாக அனுப்புவதுடன், தெரிவுகள் செய்யப்படுமிடத்து அது தமது நாளாந்த வழமையான கடமைகளுக்குப் பாதிப்பை ஏற்படுத்தாது என்பதையும் உறுதிப்படுத்தியிருக்க வேண்டும் என கோரப்பட்டுள்ளது. (31)

## மிதிவெடி அபாயம் குறித்து விழிப்புணர்வுக் கருத்தரங்கு

யாழ்.குடாநாடு எங்கும் மிதிவெடி அபாயம் குறித்து விழிப்புணர்வுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியமும், வெண்புறா செயற்கை உறுப்புக்களைப் பொருத்தும் நிறுவனமும் இணைந்து மேற்கொண்டு வருகிறது.

யாழ்.குடாநாட்டில் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக இந்த நிறுவனங்கள் மிதிவெடி அபாய விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளை நடாத்திவருகிறது.

இதன் அடிப்படையில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இந்த நிறுவனங்கள் இணைந்து, இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்திவருகின்றமை என்பது குறிப்பிடததக்கது. (17)

## படையினர் – புலிகள் மாதாந்த சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் படைத்தரப்புக்கும் இடையிலான மாதாந்த சந்திப்பு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, ஊடகப் பொறுப்பாளர் இமையவன், யாழ்.மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் ஆகியோர் விடுதலைப் புலிகள் சார்பில் கலந்துகொண்டனர்.

படைத்தரப்பின் சார்பில் யாழ்.குடாநாட்டு இராணுவத் தளபதியின் பிரதிநிதியும், பொலிஸ் அதிகாரியும் கலந்துகொண்டனர். இந்தச் சந்திப்பில் உயர்பாதுகாப்பு வலயம் சம்பந்தமாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### மூன்றுவருட வேலை ஒழுங்கின்கீழ்

## அரசாங்க ஊழியர்களுக்கான சம்பளம் 9500 ரூபாவால் அதிகரிப்பு

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முதலாவது வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் மூன்றுவருட விசேட அபிவிருத்தித்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அதன் மூலம், அந்தக் காலப்பகுதியினுள் அரச ஊழியர்களின் சம்பளத்தை 9500 ரூபாவால் அதிகரிப்பதற்கு வரவு - செலவுத் திட்டத்தில் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி மூன்று வருடகாலப் பகுதியினுள் இந்தச் சம்பள உயர்வுக் கொடுப்பனவு அனைத்து அரச ஊழியர்களுக்கும் கிடைக்கும். 2005 ஜனவரி மாதத்தில் இருந்து 3 ஆயிரம் ரூபா வரையும், 2006 ஜனவரியிலிருந்து 3 ஆயிரம் ரூபாவரையும், 2007 ஜனவரியிலிருந்து 3 ஆயிரம் ரூபாவரையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## புத்தசாசன வேலைக்கு கிறிஸ்தவ மதகுருமார்

(கொழும்பு)

புத்தசாசன ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவது தொடர்பாக, புத்தசாசன அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள செயலமர்வுக்கு இரண்டு கிறிஸ்தவமதகுருமார்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளனர்.

ஆணைக்குழுவின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவது பற்றிய செயலமர்வை டிசம்பர் 17, 19 ஆகிய திகதிகளில் இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலமர்வின்கீழ் நடைபெறுகின்ற ஊடகக்குழுவுக்கு வண.பிதா சிறில் காமினி, வண.பிதா என்ற ஆகியோர் தெரிவாகியுள்ளனர். இந்தச் செயலமர்வுக்கு ஜாதிக ஹெல உறுமயவின் பிக்குகளுக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை என, நாடாளுமன்ற உறுப்பினர் ஒமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

## வரலாற்று முக்கியத்துவமிக்க 31-10-1995...

- சிலம்பு

# தமிழர்கள் தங்கள் தலைமையை உலகிற்கு உணர்த்திய நாள்...

**1995** ஒக்டோபர் 31 தமிழீழ மக்கள் தமது ஒற்றுமையையும், தமது உணர்வையும் உலக நாடுகளுக்கு எடுத்துக் காட்டிய நாளாகும். அரச படைகள் தமது முழுப் பலத்தையும் ஒன்றாக இணைத்து



வலிகாமம், யாழ்.நகர் ஆகிய பகுதிகளைக் கைப்பற்ற முனைந்து, அப்பொழுது மக்களுக்கு ஏற்படப்போகின்ற பேரழிவைக் கருத்திற்கொண்டு போர்த் தந்திரோபாயங்களைப் புலிகள் மாற்றியமைத்தனர். மக்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுத்து எடுக்கப்பட்ட திட்டத்துக்கமைய மக்களுக்கு ஒலிபெருக்கி மூலம் விளக்கம் கொடுத்தனர். இதனைக் கேள்விப்பட்ட மக்கள் தமது உடைமைகளைப் பெருமளவில் விட்டுவிட்டு கையில் எடுத்துச் செல்லக் கூடியவற்றுடன் தென் மராட்சியையும், வடமராட்சியையும் நோக்கிப் புறப்பட்டனர். ***நாங்கள் உனது ஆட்சிக்குள் இருக்க முடியாது, விடுதலைப்புலிகளுடன் வாழப் போகின்றோம், மக்கள் இல்லாத வெறும் மண்ணை நீ ஆக்கிரமித்துக் கொள்*** என்று மக்கள் ஆட்சியாளருக்குத் தெரிவித்து விட்டு தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேறினர். இது ஒரு வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த இடப்பெயர்வாகும். தமிழ்மக்களின் காவலர்கள் விடுதலைப் புலிகளே. விடுதலைப்புலிகளின் பாதுகாப்பே தமிழ் மக்களுடைய இன்றைய தேவை. எனவே, புலிகளுடன் நாங்கள் செல்கின்றோம என்று மக்கள் அன்று தெட்டத் தெளிவாக உலகத்துக்குக் காட்டி நின்றனர். அதனால் தான் அந்த 1995 ஒக்டோபர் 31 இல் செம் மணிப் பாலத்தால் மக்கள் வெள்ளம் தென்மராட்சியை நோக்கிப் புறப்பட்டது.

முழுத் தமிழினமும் ஒட்டுமொத்தமாகப் புறப்பட்டதால் செம்மணிப் பாலத்தில் மக்கள் நெரிசல். கைக் குழந்தைகளுடன் வந்த தாய் மார், கர்ப்பிணித் தாய்மார், நடக்க முடியாத முதியவர்கள் என்று எல்லோருமே துன்பச் சுமைகளைத் தாங்கியவாறு திரண்டனர். மக்கள் நெரிசலால் பயணம் பல மணித்தியாலங்கள் தடைப்பட்டது. ஆமை வேகத்திலிருந்த பயணம் நத்தை வேகத்துக்குக் குறைந்தது. அப்பொழுது தூரத்திலே "பரா" வெளிச்சம் எழுந்த வண்ணம் இருந்தது. எப்பொழுது இந்தப் பாலத்தைக் கடப்போம். விடியமுன் போய்விடுவோமா என்று எல்லோர் மனதிலும் ஒரு கேள்வி எழுந்து கொண்டிருந்தது. அப்பொழுது மழை கொட்டு, கொட்டென்று கொட்டியது. நீருக்காக ஏங்கியவர்கள் மழைத் தண்ணீரைக் கைகளில் ஏந்தித் தாகத்தைத் தீர்த்தனர். அதனால் மழை மக்களை நனைத்துத் தொல்லை தந்ததா ஆறுதல் தந்ததா என்பதைக் கூற முடியாமல் இருந்தது. ஆனாலும், மக்கள் சோர்வடையவுமில்லை, தளர்வடையவுமில்லை. மக்களின் ஒரே எண்ணம் சிங்களப் படைகளிடம் சிக்கிக் கொள்ளாமல் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்றுவிடவேண்டும் என்பதேயாகும். இந்த இடப்பெயர்வை இருட்டடிப்புச் செய்வதில் சிங்கள ஆட்சியாளர் முனைப்புடன் செயற்பட்டனர். பயங்கரவாதிகள், ஆயுதக் குழு என்று விடுதலைப் புலிகளைப் பற்றிய பொய்யான பரப்புரைகளைச் செய்து வந்தவர்களுக்கு இந்த இடப்பெயர்வு ஆப்பு வைத்தது என்று தான் கூறவேண்டும்.

தான் ஒரு சமாதானத் தேவதை என்ற மாயத் தோற்றத்தை உலகுக்குக் காட்டிய வண்ணம் தமிழ் மக்களின் மேல் யுத்தத்தைத் தீவிரப் படுத்தியவர் சந்திரிகா. தான் சமாதானத்துக்காகச் சண்டை பிடிப்பதாகப் புதிய சித்தாந்தத்தை உலாவவிட்டவர் அவர். ஆனால், சந்திரிகா யுத்தத்தின் மேல் காதல் கொண்டவர். தமிழர்களை ஏமாற்றி அடிமைகளாக ஆள்வதற்காகவே அவர் சமாதானத்துக்கான சண்டை என்று குரல் எழுப்புகிறார் என்பதை தெளிவாக அறிந்து கொண்டதால் தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக வெளியேறி, புலிகளின் பகுதிக்குச் சென்று தமது நிலையை வெளிப்படுத்தினர். ஆனால் சந்திரிகா இன்றுவரை தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டவராகத் தெரியவில்லை. ஏனெனில் அவரது இன்றைய கருத்துக்களும் உரைகளும் தமிழ்மக்களை ஆயுதக்குழுவிடமிருந்து மீட்கவேண்டியுள்ளது என்ற தொனியிலேயே அமைந்துள்ளன. அதாவது உலகமே இவர்கள் பயங்கரவாதிகள் அல்ல, விடுதலைப் போராளிகள் என்று ஏற்றுக்கொண்டிருக்கும் பொழுது ஆயுதக்குழுவினரிடமிருந்து தமிழ்மக்களை மீட்க வேண்டும் என்று பல இடங்களில் உரையாற்றிவருவதன் உள்நோக்கம்தான் என்ன? சமாதான முன்னெடுப்புகள் நடந்துகொண்டிருக்கும்பொழுது, அதனைத் தடுப்பதற்காக நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தலை நடத்தியவர் சந்திரிகா. ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்தால் மாத்திரமே நாடாளுமன்றத்தில் ஆட்சிப்பெரும்பான்மை கிடைக்கும் என்பதால், அவர்களுடன் கூட்டுச் சேர்ந்தார். அவரது ஒரே எண்ணம் தனது அரசியல் எதிர்காலம் பற்றியதாகவே உள்ளது.

தற்போதைய அரசியல் யாப்பின்படி தனது பதவிக்காலம் முடிவடையப்போகிறது என்பது மட்டுமே அவரது கவலை. அளவுக்கதிகமான அதிகாரங்களைக் கையில் வைத்திருந்த ஒருவரால் ஓய்வு பெற்ற ஜனாதிபதியாக வாழமுடியாமல் உள்ளது. அத்துடன் பண்டார நாயக்காவின் பரம்பரை அரசியலுக்கும் முற்றுப்புள்ளி வந்துவிடும் என்ற பயமும் எழுந்துள்ளது. இந்த நிலையில் எப்படியாவது அதிகாரத்தில் இருக்க நினைக்கிறார் சந்திரிகா. 1956 ஆம் ஆண்டு முதல் தமிழ்மக்களைப் பகடைக்காய்களாக வைத்தே அரசியல் நடத்தி ஆட்சியதிகாரத்தை இருபெரும் சிங்களக் கட்சிகள் மாறிமாறிக் கைப்பற்றி வந்தன. அந்த நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி சந்திரிகா இன்றும் உள்ளார்.

சிங்கள மக்கள், யுத்தத்தை தமிழ் மக்களுக்கு எதிரானதாகவே நினைத்தனர். ஆனால், யுத்தம் தங்களையும் பாதிப்பதை இன்று உணரத் தலைப்பட்டுள்ளனர். எனவே சமாதானத்தை அவர்கள் வேண்டி நிற்கின்றனர். இதனையே அவர்கள் கடந்த இரு தேர்தல்களிலும் காட்டியுமிருந்தனர்.

ஆனால், சிங்கள அரசியல் தலைமை, சிங்கள மக்களின் சமாதானத்திற்கான ஒப்புதலை முறையாக ஏற்றுக்கொள்ளமுடியாமல் தவிக்கின்றது. ஐக்கிய தேசியக் கட்சி மிகவும் நாசூக்காக சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடரவும் உலக நாடுகளின் அழுத்தங்களைப் புலிகள்மேல் திணிக்கவும் முயன்றது. புலிகளின் நுணுக்கமான ராஜதந்திரக் காய்நகர்த்தல் மூலம் இது முறியடிக்கப்பட்டது. புலிகள் இடைக்காலத் தன்னாட்சி வரைபை முன்வைத்தனர். காலம் எப்பொழுது வரும் எனக் காத்திருந்த ஜனாதிபதி சந்திரிகா தேர்தலைச் சந்திக்கவைத்து இன்று சமாதானப் பேச்சுவார்த்தையைத் தொடங்காமல் காலத்தை இழுத்தடிக்கின்றார்.

சமாதானப் பேச்சுவார்த்தை விரைவில் தொடங்கும். இடைக்கால தன்னாட்சி அதிகார வரைபு யோசனையில் திருத்தங்கள் கொண்டு வரப்படும், மாற்று யோசனைகள் முன்வைக்கப்படுகின்றன, இடைக்கால தன்னாட்சி அதிகார வரைபுடன் நிரந்தரத் தீர்மானம் பற்றியும் இணைந்த பேச்சுவார்த்தை நடைபெறவேண்டும், அரசியல் கட்சிகள், மதகுருமார் போன்றவர்களின் ஆலோசனைச்சபை அமைக்கப்பட்டு அதனடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெறும் என்று காலை ஒன்று மாலை வேறொன்று, இன்று ஒன்று, அடுத்த நாள் வேறொன்று என மாற்றி மாற்றிப் பேசி வருகின்றார் அவர். உலகையும் ஏமாற்றிச் சிங்கள மக்களையும் ஏமாற்றி வருகின்றார் ஜனாதிபதி. ஆனால் தன்னால் தமிழ் மக்களை ஏமாற்ற முடியாது என்பதை அவர் தெரிந்து வைத்துள்ளார். ஏனெனில் இன்றைய தமிழ்த் தலைமையைத் தமிழ் மக்கள் நம்பியுள்ளனர். இது உறுதியான தலைமை, ஏமாற்றப்பட முடியாத தலைமை என்பது ஜனாதிபதி அறிந்த உண்மை. எனவேதான் விடுதலைப் புலிகளின் பெயரைக் களங்கப்படுத்தவும் அவரகள் சமாதானத்துக்கெதிரானவர்கள் என்ற கருத்தைப் பரப்பவும் அவர் முனைநதுள்ளார்.

ஐ.நா அவையிலும், அதற்கு முன்னர் நியூயோர்க்கில் நடந்த பொது நிகழ்ச்சியிலும் புலிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வர மறுக்கிறார்கள் என்று பேசியவர், பின்னர் நாடு திரும்பியதும் சிங்கள மக்களிடம்- தமிழ் மக்களை ஆயுதக் குழுவிடமிருந்து மீட்கவேண்டும் என்று கூறினார். கொடிய குண்டுகளையும் ஆயுதங்களையும் கையில் கொண்டுதிரியும் ஆயுதக் குழு என்று விடுதலைப் புலிகளைக் குறிப்பிட்ட ஜனாதிபதி, தமிழ் மக்களை அவர்களிடமிருந்து மீட்டுவிட்டு எவருடன் பேசப் போகின்றார். யதார்த்தமற்ற அவரின் உரை எதனைக் காட்டுகின்றது? விடுதலைப் புலிகளைத் தமிழ் மக்களிடமிருந்து பிரிக்கவேண்டும் என்ற நம்பிக்கையை மாத்திரமே காட்டுகின்றது. ஆனால் உண்மை எதிர்மாறாகவே உள்ளது. தமிழ் மக்களைப் பிரிப்பதற்கு, ஒற்றுமையைச் சிதறடிப்பதற்கு, பல்வேறு காலங்களில் பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. கடைசியாக மேற்கொள்ளப்பட்டது, கருணா என்னும் ஒருவரை வைத்து பிரதேசவாதத்தை எழுப்பித் தமிழ் மக்களின் ஒற்றுமைப் பலத்தைக் குறைக்கமுயன்றதேயாகும். கருணா ஆயுதங்களை வைத்துக்கொண்டு பிரதேச




வாதத்தை எழுப்ப, அரசும் அதற்கு உதவியது. ஆனால் அது தோல்வியுற்றதைச் ஜீரணிக்கமுடியாத அரசு இன்று அந்த ஆயுதக் குழுவை அரசியல் கட்சியாக்க முயன்று வருகின்றது. இதற்கு ஜனநாயகச் சாயம் பூசிடவும் முயல்கின்றனர். அத்துடன் இந்த முயற்சிக்கு அயல் நாடும் பெரிய ஆதரவை அளிக்கின்றது. அதனால், தான் வளர்த்த ஈ.என்.டி.எல்.எப் என்ற அமைப்பையும் இங்கு அழைத்துள்ளது. அதாவது தமிழ் மக்களைப் பலம்பொருந்திய விடுதலை அமைப்பிலிருந்து விடுவித்துத் தனிமைப்படுத்துவதற்காகப் பல நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

இவை சாத்தியமா? இதுதான் இன்றைய கேள்வி. வரதராஜப் பெருமாளை வைத்துத் தனது நோக்கங்களை நிறைவேற்ற முடியாமல் போனதை நன்கு அறிந்த அயல் நாடு மீண்டும் அதே பாணியில் வேறு ஆட்களைவைத்து நாடிபிடித்துப் பார்க்க விரும்புகின்றது. டக்ளஸ் போன்றவர்களை வைத்து ஆடிய ஆட்டங்களை மக்கள் நிராகரித்ததை அறிந்தும் கூட கருணாவை வைத்து ஆடலாம் என்று சிங்களம் நம்புகின்றன.

ஆனால் தமிழ் மக்கள் உறுதியானவர்கள் உரிமைக்காக எதனையும் இழக்கத்தலைப்பட்டவர்கள். 2002 இல் நடந்த தேர்தலில் ஆயுத அட்டகாசங்களுக்கிடையில் புலிகளுடன் மட்டும் பேசவேண்டும் என்று ஆணையிட்டனர் தமிழ் மக்கள். பின்னர் சமாதான உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர் முதல் தடவையாகப் புலிகள் யாழ்ப்பாண மண்ணுக்கு வந்தபொழுது, முகமாலையில் இருந்து நல்லூர்வரை திரண்டு நின்று வரவேற்றவர்கள் தமிழ் மக்கள். பொங்குதமிழ் நிகழ்விலே திரண்ட மக்கள் வெள்ளம் தங்கள் புலிவீரர்களை அந்த மேடையில் கண்டதும் அடைந்த பேரானந்தம் அளவிடற்கரியது. அதற்குப் பின்னர் 2004 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் புலிகளே தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகள், இடைக்கால தன்னாட்சி அதிகார வரைவினடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என மக்கள் அளித்த தீர்ப்பை ஒரு மக்கள் கருத்துக்கணிப்பாகவே கருதவேண்டும். அத்துடன் அதுவே மக்களின் ஆணையாகவும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். இந்த நிலையில் தமிழ் மக்களைப் புலிகளிடமிருந்து விடுவிக்கப்போவதாக ஜனாதிபதி கூறுவது பொருத்தமானதா? அவரால் அது சாத்தியமாகுமா? என்பது கேள்விக்குரியதல்ல. ஏனெனில் 1995 ஒக்டோபர் 31 இல் தமிழ் மககள் மேற்கொண்ட வரலாற்று முக்கியத்துவ இடப்பெயர்வே தமிழ் மக்களின் நிலைப்பாட்டின் வெளிப்பாடாகும். தமிழ் மக்கள் வேறு, புலிகள் வேறல்ல. தமிழ் மக்களே புலிகள். புலிகளே மக்கள் என்பது யதார்த்தமான உண்மையாகும். இன்று உலகமே புலிகளை விடுதலை இயக்கமாக ஏற்றுக்கொண்டுள்ளது. விடுதலையின் வாசலுக்குத் தமிழினம் வந்து நிற்கிறது. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் எப்படி ஒக்டோபர் 31 இல் திரண்டு புலிகளின் பின்னால் நின்றார்களோ, அதே உணர்வுடன், அதே விடுதலை வேட்கையுடள் தமிழினம் இன்றும் உள்ளது, என்றும் இருக்கும். ✡

# சோமாலியாவில் மீளவும் மோதல் தொடங்கியது!

சோமாலிலாந்தை குடியரசு நாடாக பிரகடனப்படுத்தியுள்ள படைகளுக்கும், சோமாலியாவின் பன்ட்லான்ட் படைகளுக்குமிடையில் மீண்டும் மோதல் ஆரம்பித்துள்ளது.

இந்த இருபகுதிப் படைகளுக்கும் எல்லைப் பகுதியான லாஸ் அனோட் பகுதியில் மோதல் நடைபெறுவது இந்த மாதத்தில் இது இரண்டாவது தடவையாகும்.

இந்த மோதல்களில் குறைந்தது ஒன்பது பேர் வரை கொல்லப்பட்டுள்ளதாக சோமாலியத் தகவல்கள் தெரிவித்தன.

இருபகுதியினருக்குமிடையே ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல் என்பன கடுமையாக இடம்பெற்று வருகின்றன. முதலில் சண்டையைத் தொடக்கியது தொடர்பாக இருபகுதியினரும் ஒருவரையொருவர் குற்றம் சாட்டி வருகின்றனர்.

சோமாலியாவை மீளக் கட்டியெழுப்புவதற்கு நிதியுதவிகளை வழங்குவது தொடர்பாக சுவீடனில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவரும் வேளையே இந்தப் புதிய மோதல் வெடித்துள்ளது.

சோமாலியாவின் ஜனாதிபதியாக இந்த மாதமுற்பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அப்துல்லா யூசுப் தொடர்பாக சோமாலிலாந்து கவலையடைந்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

# அமெரிக்கா மீது தொடர்ந்தும் தாக்குதல்கள் நடத்தப்படும்!

## ஒஸாமா பின்லேடன் சூளுரை



அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் வேளையில் - 2001 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி உலகவர்த்தக மையத்தின் மீது மேற்கொள்ளப்பட்டதைப்போன்று பல தாக்குதல்கள் அமெரிக்கா மீது மீண்டும் மேற்கொள்ளப்படும் என அல்கொய்டா அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று அல் - ஜசீரா தொலைக்காட்சியில் தோன்றிய ஒஸாமா பின்லேடன் - செப்ரெம்பர் 11 ஆம் திகதி உலகவர்த்தக மையத்தின் மீது தாமே தாக்குதலை மேற்கொண்டதாகவும், அமெரிக்காவின் பிடியிலிருந்து முஸ்லிம்களை மீட்பதற்காகவே வர்த்தக மையத்தின் மீது தாக்குதல்களை நடத்தும்படி உத்தரவிட்டதாகவும் தெரிவித்தார்.

அல் ஜசீரா தொலைக்காட்சியில் தனது வலது கையால் சைகை காட்டியவாறு தோன்றிய பின்லேடன் - மிகவும் திடகாத்திரமான உடல் ஆரோக்கியத்துடன் காணப்பட்டார்.

மிகவும் நிதானமாகவும் அமைதியாவும் 'ஓ அமெரிக்க மக்களே உங்களுக்காக நான் பேசுகின்றேன்' என அவர் தனது உரையை ஆரம்பித்தார்.

அதில் அவர் அமெரிக்க மக்களே! எதிர்காலத்தில் உலக வர்த்தக மைய தாக்குதல் போன்ற ஒன்றை தவிர்ப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் யுத்தத்தைப் பற்றியும், யுத்தத்தின் விளைவுகள் பற்றியும் நான் உங்களுக்கு கூற விரும்புகின்றேன்.

செப்ரெம்பர் தாக்குதல் இடம்பெற்றவேளையில் - மக்களின் துன்ப நேரத்தில் அவர்களைக் கைவிட்ட அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தொடர்ந்தும் மக்களை ஏமாற்றியே வருகிறார். அவர் உண்மைகளை மறுத்து பொய்களையே வெளி உலகத்திற்கு வெளிப்படுத்தி வருகிறார். இதன்காரணமாக உங்கள் நாட்டில் செம்ரெம்பர் 11 தாக்குதல் போன்ற பல தாக்குதல்கள் இடம்பெறும் என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்களுக்கு ஒன்றைச் சொல்லிவைக்க விரும்புகின்றேன். உங்கள் ஜனாதிபதி புஷ் கவனமாக இருந்திருந்தால் செம்ரெம்பர் தாக்குதலின் இழப்புகளை குறைத்திருக்க முடியும். ஆனால், அந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அவர் உங்களைக் கைவிட்டுவிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷினது நிர்வாகமும் சில அரபு ஆட்சியாளர்களது நிர்வாகங்களும் ஒத்ததன்மை உடையனவாகக் காணப்படுகின்றன. இவ்விருதரப்பினது ஆட்சியும் பேராசை கொண்டதாகவும் சட்டவிரோதமாக பணத்தைக் குவிக்கும் நோக்கைக் கொண்டதாகவும் காணப்படுகின்றன.

நாம் எப்போதும் சுதந்திரத்தை விரும்பாதவர்கள் என ஜோர்ஜ் புஷ் கூறியிருக்கிறார். புஷ் தனது கருத்தினை மாற்றிகொள்ள வேண்டும். எமக்கு சுதந்திர வேட்கை இருப்பதால்தான் உங்கள் ஆதிக்கத்திற்கு எதிராக நாம் போராடி வருகிறோம்.

உங்கள் நாட்டின் பாதுகாப்பு புஷ்ஷின் கைகளிலோ, ஜோன் ஹெரியின் கைகளிலோ இல்லை. உங்கள் நாட்டின் பாதுகாப்பு உங்களைப்போன்ற மக்களிடம்தான் இருக்கிறது. புஷ்ஷோ, ஹெரியோ ஒருபோதும் உங்களை பாதுகாக்க மாட்டார்கள். அது அவர்களால் இயலாது. நாம் அமெரிக்கா மீது தாக்குதல் நடத்துவோம் இதற்கு அமெரிக்காதான் காரணம்.

லெபனானில் அமைந்திருந்த இரண்டு கோபுரக் கட்டடங்களை, 1952ஆம் ஆண்டு அமெரிக்காவின் அனுமதியுடன் இஸ்ரேல் தகர்த்தபோதுதான் முதன் முறையாக அமெரிக்காவை நான் வெறுத்தேன். இந்தச் சந்தர்ப்பமே உங்கள் நாட்டின் மீது என்னை தாக்குதல் நடத்தத் தூண்டியது எனத் தெரிவித்தார்.

பின்லேடனின் இந்த உரை தொடர்பாக கருத்துத் தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி புஷ் -

பின்லேடன் போன்ற தீவிரவாதிகளின் எத்தகைய அச்சுறுத்தலுக்கும் அமெரிக்கா ஒருபோதும் அடிபணியாது. சர்வதேசத்தில் இருந்து தீவிரவாதத்தை அழிதொழிப்பதற்கான தனது நடவடிககைகளை அமெரிக்கா தொடர்ந்தும் மேற்கொள்ளும் எனத் தெரிவித்தார்.

பின்லேடன் இந்த எச்சரிக்கை தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஜனநாயக்ககட்சி வேட்பாளர் ஜோன் கெரி -

அமெரிக்கர்களாகிய நாங்கள் ஒஸாமா பின்லேடனையும் சர்வதேச தீவிரவாதிகளையும் அழித்தொழிப்பது என்கின்ற கொள்கையில் ஒருமைப்பாட்டுடன் உள்ளோம எனத் தெரிவித்தார்.

பின்லேடனின் எச்சரிக்கை குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பி.பி.சியின் செய்தியாளர் -

ஒஸாமா பின்லேடனும் அவரது அல் கொய்டா வலை அமைப்பும் வலுவிழந்துவிட்டது என அமெரிக்கா தெரிவித்துவருகின்ற நிலையில் அமெரிக்காவிற்கு மீண்டும் பின்லேடன் தலைவலியாக இருக்கப்போகிறார் என்பது தெளிவாகின்றது எனத் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் தலைநகரில் இம்ரான்கானிடம் கொள்ளை!



பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத்தில் வைத்து அந்நாட்டின் முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் இம்ரான்கானை வழிமறித்த கொள்ளையர்கள், அவரிடமிருந்த பெரும்தொகைப் பணம் மற்றும் சில பொருட்களை கொள்ளையடித்துச் சென்றனர்.

பாகிஸ்தான் தலைநகரிலுள்ள இஸ்லாமாபாத்தின் புறநகர்ப் பகுதியில் புதிய வீடொன்றை இம்ரான்கான் கட்டிவருகிறார். இந்த வீட்டைப் பார்த்துவிட்டு அவர் நேற்று மாலை தனது இரண்டு மகன்களுடனும் காரில் திரும்பிக்கொண்டிருக்கையில் துப்பாக்கி ஏந்திய சிலர் அவரது காரை மறித்ததுடன் காரிலிருந்து இறங்கும்படியும் அச்சுறுத்தினர்.

இதனையடுத்து இம்ரான்கானும் அவரது இரண்டு மகன்மாரும் காரிலிருந்து இறங்கியதும் அவர்களிடமிருந்த பணம், கைத்தொலைபேசி, கிரடிற்காட் என்பவற்றை கொள்ளையடித்துக்கொண்டு அவர்கள் தப்பியோடிவிட்டனர்.

இம்ரான்கானிடமிருந்து பணம் மற்றும் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டமையானது பாகிஸ்தானில் சட்டம் ஒழுங்கு முற்று முழுதாக சீர்குலைந்தமையையே எடுத்துக் காட்டுவதாக இம்ரான்கானின் பேச்சாளரான அக்பர் பாபர் தெரிவித்தார்.

அத்துடன் பாகிஸ்தானிலுள்ள வி.ஜ.பி மற்றும் சாதாரண மக்களுக்கும் பாதுகாப்பு இல்லையென்பதனையே இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# 3 வெளிநாட்டவர் கடத்தல் தொடர்பாக ஆப்கானில் ஏழு சந்தேகநபர்கள் கைது!



கடத்தப்பட்டவர்களில் ஒருவரான அஞ்சலிற்றோ நாயன்

ஆப்கானில் கடத்தப்பட்ட மூன்று வெளிநாட்டவர்களை தேடிக்கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர், சந்தேகத்தின் பேரில் ஏழுபேரைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட எழுவரில் மூவர் இராணுவ உடையுடன் உள்ளதாகவும், ஆனால் அவர்கள் இராணுவமோ அல்லது பொலிஸாரோ அல்லவென ஆப்கானின் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட இவர்களுக்கும் கடத்தல்காரர்களுக்கும் இடையில் ஏதாவது தொடர்பு உள்ளதா என்பதனை உறுதியாகக் கூறமுடியாதுள்ளதாக உள்துறை அமைச்சு பேச்சாளரான லத்புல்லா மாஷல் தெரிவிதார்.

இதேவேளை இந்த வெளிநாட்டவர்களை தேடிக் கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை உடனே நிறுத்தவேண்டுமென - இவர்களைக் கடத்திய இஸ்லாமிய அமைப்பின் தலைவரான செயிட்அக்பர் அக்கா தெரிவித்தார்.

அத்துடன் இவர்கள் நலமாக உள்ளதாகவும் இவர்களை விடுதலை செய்வது தொடர்பாக பேச்சுவார்த்தை மாத்திரமே நடத்தப்படவேண்டுமெனவும், இவர்களின் விடுதலை தொடர்பாக தமது அமைப்பின் சபை கலந்துரையாடி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தக் கடத்தலானது பாரிய குற்றச் செயலெனவும் இதனைத் தான் வன்மையாக கண்டிப்பதாகவும் ஆப்கானின் ஜனாதிபதி ஹமீட்ஹர்சாய் தெரிவித்துள்ளார்.

இவர்கள் ஆப்கானில் நடந்த தேர்தலில் பங்கு பற்றியதால் கடத்தப்பட்டார்களா அல்லது வெளிநாட்டவர்கள் என்ற காரணத்தால் கடத்தப்பட்டார்களா என்பது தெளிவாகவில்லை.

இந்தச் சம்பவத்தை அடுத்து ஆப்கான் தலைநகர் காபூலிலுள்ள தொண்டுநிறுவனங்கள் மற்றும் உதவி அமைப்புகள் தமது அலுவலகங்களுக்கான பாதுகாப்பை மீளாய்வு செய்வதில் ஈடுபட்டுள்ளன.

# பிரான்ஸ் இராணுவ வைத்தியசாலையில் பலஸ்தீன தலைவர் யாசிர் அரபாத் அனுமதி!



இரத்தம் தொடர்பான கடுமையான நோயால் பாதிக்கப்பட்டுள்ள பலஸ்தீனத் தலைவர் யாசிர் அராபத் (75) பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் அருகேயுள்ள ராணுவ மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் அனுமதிக்கப்பட்டார்.

இந்த மருத்துவமனை அருகேயுள்ள விமான நிலையத்துக்கு ஹெலிகொப்டரில் வந்திறங்கிய அரபாத், மிகவும் பலவீனமாகக் காணப்பட்டார்.

பிரான்ஸ் இராணுவ மருத்துவமனையில் ரத்தம் தொடர்பான நோய்களுக்கு சிகிச்சை அளிக்க நவீன வசதிகள் உள்ளன.

அகதிகளுக்கு அடைக்கலம் தரும் நாடு என்று புகழ்பெற்ற பிரான்ஸ், மருத்துவ சிகிச்சைக்காக வந்துள்ள அரபாத்தை ஏற்றுக் கொள்ள முடிவுசெய்துள்ளது என்று பிரான்ஸ் அதிபர் ஜக் சிராக் கூறினார்.

பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் சின்னமாகக் கருதப்படும் அரபாத், மேற்குக் கரையிலுள்ள தனது அலுவலகத்திலிருந்து 3 ஆண்டுகளுக்குப் பின்பு வெளிநாடொன்றுக்கு சிகிச்சைக்காகச் சென்றுள்ளார்.

முதலில் கடுமையான காய்ச்சலால் அரபாத் பாதிக்கப்பட்டார். அவருக்கு இரத்தப் புற்றுநோய் ஏற்பட்டிருக்கலாம் நோய் மிகவும் முற்றிய நிலையில் காணப்படுகிறது என்று மருத்துவ நிபுணர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை அராபத் விரைவில் குணமடைய இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். அரபாத்துக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் பலஸ்தீன மக்கள் தாய் மண்ணுக்காக நடத்தும் போராட்டத்துக்கு அரபாத் தொடர்ந்து தலைமை ஏற்பார் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

அவருக்குத் தேவையான உதவிகளைச் செய்ய இந்தியா தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார். அராபத் விரைவில் நலம்பெற ரஷியாவும் வாழ்த்தியுள்ளது.

# ஈராக்கின் பலூஜா நகரில் தாக்குதல்: 8 அமெரிக்கக் கடற்படையினர் பலி!



(பாக்தாத்)

ஈராக்கின் பலூஜா நகரில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் எட்டு அமெரிக்கக் கடற்படையினர் கொல்லப்பட்டதுடன் மேலும் 9 பேர் காயமடைந்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

பலூஜா நகரிலுள்ள அன்பர் மாகாணத்தில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதல் தொடர்பான மேலதிக எவ்வித தகவலையும் அமெரிக்க இராணுவம் வெளியிடவில்லை.

இதேவேளை ஈராக் தலைநகர் பாக்தாத்தில் அல் அராபிய தொலைக்காட்சி அலுவலகம் மீது நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டதுடன் 19 பேர் காயமடைந்தனர்

இந்தத் தாக்குதலின்போது கொல்லப்பட்டவர்களில் ஒரு பெண் உட்பட மூவரின் சடலங்கள் சிதைவடைந்து காணப்படுவதாகவும் இவர்கள் அல்அராபிய தொலைக்காட்சி நிறுவனத்தைச் சேர்ந்த பணியாளர்களா என்பதை உறுதிப்படுத்த முடியவில்லையென இந்தச் செய்திநிறுவனத்தின் பெண் செய்தியாளரான நஜ்வா குவாசிம் தெரிவித்தார்.

ஆனால் இந்தத் தாக்குதலில் படைவீரர் ஒருவரும் நிர்வாக அதிகாரி ஒருவரும் கொல்லப்பட்டதை அவர் உறுதிப்படுத்தினார்.

இதேவேளை அமெரிக்க கடற்படையினர் மீதான தாக்குதலை அடுத்து தலைநகர் பாக்தாத்தின் தென்பகுதியில் சென்றுகொண்டிருந்த மூன்று மினிபஸ்கள் மற்றும் மூன்று வாகனங்கள் மீது ஈராக்கியப் படையினர் கண்மூடித்தனமாக நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 14 பொதுமக் கள் கொல்லப்பட்டதுடன் மேலும் 10 பேர் காயமடைந் தனர்.

இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்ட 18 பேரின் உடல்களை தான் கண்டதாக ஏ.பி.ரி.என். செய்தி நிறுவனப் படப்பிடிப்பாளர் தெரிவித்த அதேவேளை இந்தத் தாக்குதலில் 20 பேர் கொல்லப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

உலக நோக்கு

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மனித உரிமை அமைப்புக்களை விடுதலைப் புலிகள் மதிக்கின்றன

## யாழ். அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரி

(வவுனியா)

விடுதலைப்புலிகள் மனிதஉரிமைகளைப்பேணும் அமைப்புகளை மதிப்பதாகவும் அவர்களின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் யாழ். மாவட்ட அரசியற்துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதி தெரிவித்தார்.

நேற்று யாழ்.மனிதஉரிமை ஆணைக்குழு ஆணையாளர் என்.செல்வக்குமரனை சந்தித்து கலந்துரையாடிய பின்னர் பத்திரிகையாளர் மத்தியில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் -

அரச படைகளினால் எமது மக்களின் தொழில் உரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளன. எமது பகுதியிலுள்ள பொலிஸார் மக்களுக்கு தீர்வு வழங்க முற்படுகின்றபோது அது தெளிவாக மக்களைச் சென்றடையவில்லை இதற்கு மொழி ஒரு காரணமாக அமைகின்றது.

மனிதஉரிமை பேணப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாகவுள்ளோம். மனித உரிமை ஆணைக் குழுவின் நடவடிக்கைகள் சிறப்பாக முன்னெடுக்கப்பட வேண்டும். எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் மனித உரிமைகள் பேணப்படவேண்டும் என மனித உரிமை செயலகம் ஒன்றை நாம் கிளிநொச்சியில் அமைத்துள்ளோம்.

யாழ். மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகள் சட்டத்தை பேணுபவர்களால் தாக்கப்பட்டமையை கண்



டிப்பதுடன் இதற்கு இறுக்கமான முடிவு ஒன்று எ கப்படவேண்டும்.

காணாமற்போனோர் தொடர்பாக அறிக்கை வெளியிடுவதைவிட, சம்பந்தப்பட்டவர்கள் மீது தகு நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர் மே தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது யாழ் மனிதஉரின ஆணைக்குழு இணைப்பதிகாரி றொகான் சந்திரசே பொது அமைப்புகளின் பொறுப்பாளர்அ.சுதாஸ், தொ சங்கபொறுப்பாளர் இமையவன் ஆகியோர் கல கொண்டனர்.

# சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும்

## அகாஷியிடம் சந்திரிகா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான நேரடிப் பேச்சுக்கள் விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டியது அவசியம் என்று ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷியிடம் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற அகாஷியுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் சமாதான செயற்பாடுகளின் தற்போதைய முன்னேற்றங்கள் குறித்தும் அகாஷியிடம் ஜனாதிபாதி சந்திரிகா எடுத்துக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு பொருளாதார உதவிகளை ஜப்பான் வழங்குவது குறித்து ஜனாதிபதி தமது நன்றியை விசேட சமாதானப் பிரதிநிதி அகாஷியிடம் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்டும் விடயத்தில் ஜப்பான் காட்டிவரும் அக்கறை குறித்தும் ஜனாதிபதி தமது மகிழ்ச்சியை வெளியிட்டார் என ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(01)

# மூன்று முஸ்லிம் எம்.பிக்கள் அமைச்சர்களாக நியமனம்!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் மாற்றுக் குழுவாக கருதப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களாக நேற்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். அமீர் அலி மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு அமைச்சராகவும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நஜீப் ஏ.மஜீத் திருமலை மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு அமைச்சராகவும் -

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் வன்னி மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு அமைச்சராகவும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

ஏற்கனவே அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தி ஜனாதிபதி மீது அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இதனாலேயே இந்த மூவரும் அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 9 பேரில ஏற்கனவே ஹுசைன் பைலா ஆளும் கட்சிக்குத் தாவி பிரதி அமைச்சரானார். இப்போது இந்த மூவரும் ஆளும் கட்சிக்கு ஆதரவு வழங்குவதற்கு முன் வந்ததையடுத்து, அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 5 ஆக குறைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

சமாதான....

# படையினர் - புலிகள் வவுனியாவில் சந்திப்பு!

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறையினருக்கும், வன்னி மாவட்ட படை அதிகாரிகளுக்குமிடையே நேற்றைய தினம் வவுனியாவில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் மாதாந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

நேற்றுக்காலை பத்து மணியிலிருந்து சுமார் ஒரு மணி நேரமாக இடம்பெற்ற இந்தச் சந்திப்பில், விடுதலைப் புலிகள் தரப்பில் - வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் தலைமையிலான குழுவினரும், படையினர் தரப்பில் - வன்னி மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பரமி குலதுங்க மற்றும் பொலிஸார் தரப்பில் - பொலிஸ் அத்தியட்சகர்களான கஸ்தூரிரட்ண, மிஸ்கின் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில், அண்மையில் வவுனியாவில் காணாமற்போன இரண்டு புளொட் அமைப்பின் உறுப்பினர்கள் தொடர்பாக படையதிகாரிகளால் விடுதலைப் புலிகளிடம் வினவப்பட்டபோது, இவர்கள் காணாமற்போனமைக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும்

## பெற்றோல் டீசல் விலைகள் 4 ரூபாவால் அதிகரிக்கும்!

அடுத்த மாதம் எரிபொருளின் விலை மேலும் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அஞ்சல் தின போட்டியில் யாழ்.மாவட்ட முடிவுகள் நேற்று வெளியாகின

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அஞ்சல் தினத் முன்னிட்டு அஞ்சல் திணைக் மும் தேசிய சேமிப்பு வங்கி இணைந்து நடத்திய பரிசுப்போ யின் முடிவுகள் நேற்று நள்ளிர வெளியானது.

யாழ்.மாவட்ட முடிவுகளின்படி

கோண்டாவில் மேற்கு உ தபாலகம் 11 ஆயிரத்து 83 வாக்குகளைப் பெற்று முத டத்தையும் -

சுன்னாகம் தபாலகம் ஆயிரத்து 586 வாக்குகளை பெற்று இரண்டாவது இடத் யும் -

கோப்பாய் தபாலகம் 7 ரத்து 246 வாக்குகளைப் பெ மூன்றாமிடத்தையும் பெற்றுள்

இதேவேளை தேசிய டத்தில் இரண்டு இடங்கள் மாவட்டத்துக்குக் கிடைக்கச் சாத்தியக்கூறுகள் இருப்

விருத்தி மற்றும் புனர்வாழ்வு அமைச்சராகவும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நஜீப் ஏ.மஜீத் திருமலை மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு அமைச்சராகவும் -

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் வன்னி மாவட்ட அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு அமைச்சராகவும் பதவிப்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 9 பேரில ஏற்கனவே ஹுசைன் பைலா ஆளும் கட்சிக்குத் தாவி பிரதி அமைச்சரானார். இப்போது இந்த மூவரும் ஆளும் கட்சிக்கு ஆதரவு வழங்குவதற்கு முன் வந்ததை யடுத்து, அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 5 ஆக குறைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## சமாதான....

மட்டக்களப்பு 23-3 ஆவது படைப்பிரிவுத் தலைமையகத்தில் 23 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் வஜிர விஜய குணவர்த்தன மற்றும் 23-2 ஆவது பிரிகேட் கட்டளை அதிகாரி கேணல லக்சிறீ அமரதுங்க ஆகியோரை சந்தித்து உரையாடிய பின்பு சமாதானக்குழு அலுவலகத்தில் குழு உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடினார்.

இந்தச் சந்திப்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மகேஸ் சமரதிவாகரவும் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்புக்களில் குறிப்பாக விடுதலைப் புலிகளின் அமைப்பிலிருந்து கருணா வெளியேற்றப்பட்ட பின்பு இந்த மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள நிலமை, தொடரும் ஆட்கொலைச் சம்பவங்கள் போன்றன குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

சமாதானக் குழுவினருடன் இடம்பெற்ற சந்திப்பின்போது சமாதானப் பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்களில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை காரணமாக மக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டு,

இரு தரப்புப் பேச்சுவார்த்தை விரைவாக ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றி வலியுறுத்தப்பட்டது.

இதன் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய யசுஷி அகாஷி - இந்தச் சந்திப்புக்களின்போது குறிப்பாக மக்கள் பிரதிநிதிகள் கருணா வெளியேறிய பின்பு ஏற்பட்ட பிரச்சினைகள் உட்பட இந்தப் பிரதேசத்தில் இடம்பெற்ற சில பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறினர்.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட பின்பு சில பிரச்சினைகளுக்கு தீர்வை எட்ட முடியும் என்றுதான் நம்புவதாக அகாஷி கூறினார்.

## தமிழ்ச்....

ஏற்கனவே - இந்தச் சந்திப்பு இன்று நடைபெறுவதாகத் திட்டமிடப்பட்டிருந்தபோதும் - தமிழ்ச்செல்வன் இன்றைய தினமே ஐரோப்பிய விஜயத்தை முடித்துக்கொண்டு வன்னிக்குத் திரும்பவுள்ளதால் சந்திப்பு நாளை நடைபெறும்.

இதனால், யசுஷி அகாஷி எதிர்வரும் 3 ஆம் திகதியே இந்தியா ஊடாக நாடு திரும்பத் திட்டமிட்டிருக்கிறார் எனத் தெரியவருகிறது.(01)

## ஈராக்கில்....

இவரது கடத்தல் தொடர்பாக மனவேதனையுடன் கருத்துத் தெரிவித்த மனைவி - தனது கணவர் எமது குடும்ப வறுமையினை நீக்குவதற்காகவும், எமது வயிற்றுப் பிழைப்பிற்காகவுமே 70 ஆயிரம் ரூபா கடனபட்டு குவைத்திற்குச் சென்றார்.

எவ்வாறு ஈராக்கிற்கு அவர் சென்றார் என்பது எமக்குத் தெரியாது. எனது கணவர் ஒரு வருடமாக குறைந்த சம்பளத்திற்கே வேலை செய்து வந்தார். தனது சம்பளம் போதாது என்றாலும் எமக்காகப் பல துன்பங்களின் மத்தியில் வேலை செய்வதாகக் கடிதம் எழுதியிருந்தார்.

சென்ற மாதம்தான் நல்ல சம்பளத்தில் வாகனம் செலுத்துவதாக எழுதியிருந்தார். நேற்று முன்தினம் தொலைக்காட்சி மூலமாகவே எனது கணவர் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுள்ளார் என்பதை அறிந்தேன் எனக் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

இவரது கடத்தல் சம்பவம் தொடர்பாகத் தீவிரவாதிகள் நிபந்தனைகள் எதனையும் விதிக்காத நிலையிலும் இவரது விடுதலை தொடர்பாக ஆராய்ந்து வருவதாக லெபனானில் உள்ள இலங்கைத் தூதுவர் தெரிவித்தார்.

தச் சந்திப்பு இடம்பெற்றது.

நேற்றுக்காலை பத்து மணியிலிருந்து சுமார் ஒரு மணி நேரமாக

## பெற்றோல் டீசல் விலைகள் 4 ரூபாவால் அதிகரிக்கும்!

அடுத்த மாதம் எரிபொருளின் விலை மேலும் அதிகரிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அடுத்த மாதம் முதல் பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றின் விலைகள் ஆகக் குறைந்தது 4 ரூபாவால் அதிகரிக்கப்படும் என பெற்றோலிய கூட்டுத்தாபனத் தகவல்கள் தெரிவித்தன. பெற்றோல், டீசல் ஆகியவற்றுக்கான மானியங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில், உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை மேலும் அதிகரிக்கப்படும்போது அந்த விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும் என திறைசேரி அறிவித்துள்ளது. (01)

## படையினர்....

படையினரின் சோதனைச் சாவடிகளிலும் வீதிச் சோதனைகளிலும் மக்கள் எதிர்நோக்கும் கெடுபிடிகள் குறித்து விரிவாக எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

இனிமேல் அத்தகைய கெடுபிடிகள் இடம்பெறமாட்டாது என்று படைத்தரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படாது விட்டால், இத்தகைய சந்திப்புக்கள் பற்றி யோசிக்க வேண்டிவரும் என்பதை படைத்தரப்பின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம்.

ஆட்கொலைகளை பொறுத்தவரை எமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் எத்தகைய வன்முறைச் சம்பவங்களும் இல்லை. இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் இத்தகைய ஆட்கொலைகள் குறித்து தகுந்த முறையில் விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டியது அரசாங்கப் படையினரின் பொறுப்பாகும்.

இதற்கு எமது ஒத்துழைப்பு தேவைப்பட்டால் வழங்கப்படும் என்பதையும் இந்தச் சந்திப்பில் சுட்டிக்காட்டியுள்ளோம் என்று மேலும் தெரிவித்தார். அத்துடன் அடுத்த சந்திப்பு எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மற்றும் பொலிஸார் தரப்பில் - பொலிஸ் அத்தியட்சகர்களான கஸ்தூரிரட்ண, மிஸ்கின் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில், அண்மையில் வவுனியாவில் காணாமற்போன இரண்டு புளொட் அமைப்பின் உறுப்பினர்கள் தொடர்பாக படையதிகாரிகளால் விடுதலைப் புலிகளிடம் வினவப்பட்டபோது, இவர்கள் காணாமற்போனமைக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென, வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஞானவேல் தெரிவித்தார். (03)

டத்தையும் -

சுன்னாகம் தபாலகம் ஆயிரத்து 586 வாக்குகளை பெற்று இரண்டாவது இடத்தையும் -

கோப்பாய் தபாலகம் 7 ... ரத்து 246 வாக்குகளைப் பெ... மூன்றாமிடத்தையும் பெற்றுள்...

இதேவேளை தேசிய ... டத்தில் இரண்டு இடங்கள் ... மாவட்டத்துக்குக் கிடைக்கச் ... சாத்தியக்கூறுகள் இருப் ... யாழ்.மாவட்ட அஞ்சல் ... யட்சகர் எஸ்.சிவராஜசிங்க... வித்தார்.

## அயர்லாந்து கட்சித் தலைவருடன்...

முரண்பாடுகள் களையப்பட வேண்டும்.

இலங்கையின் அழகைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவும், நாட்டின் அபிவிருத்திக்காகவும், அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்களை எவ்வித தாமதமுமின்றி ஆரம்பிக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் -

கடந்த காலங்களில் இலங்கை அரசாங்கம் ஒப்பந்தங்களை மீறியதால் ஏற்பட்டுள்ள கசப்பான அனுபவங்கள் காரணமாக, தமிழ் மக்கள் தமக்கு ஏற்றதொரு அரசியல் ஒழுங்கமைப்பை எதிர்பார்க்கின்றார்கள்.

அத்துடன், எதிர்க்கட்சி உ... பட்ட ஏனைய கட்சிகள் இடை... கால நிர்வாகசபை அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு வழங்குகின்ற ஆதரவை, அரசாங்கம் உரியமுறையில் பயன்... வேண்டும் எனத் தமிழ் மக்கள் ... பார்க்கின்றார்கள் எனத் தெ... தார்.

இந்தச் சந்திப்பின்போது, ... னால் பாதிக்கப்பட்ட வடக்கு... கிழக்குப் பகுதியில் மேற்கொள்ள... வேண்டிய மனிதாபிமான வே... களுக்குத் தமது நாட்டு அரசாங்க... பூரண ஒத்துழைப்பை வழங்கு... என ஜோன் ஹியூம் உறுதியளித்தார்.


# விற்பனைக்கு

எம்மிடம் ஆலயங்கள், அன்னதான மண்டபங்கள், திருமண மண்டபங்களுக்குத் தேவையான நிலத்தைச் சுத்தம் செய்கின்ற பிலிப்பர் மெசின் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :-

**தில்லையம்பதி மோட்டோர்ஸ்**

இலக்கம்- 236,

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(C/3301)

T.P :- 222 5710



இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.